Koviloor Digital Library

உ

திருச்செந்திலாண்டவன் துணை

உண்மை விளக்கம்

(தெளிவுரையுடன்)

KOVILOOR VEDANTA MUTT

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
"கயிலைமாமுனிவர்"
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெற்றது.

ACC NO:12805

விஜயதசமி வெளியீடு

தெளிவுரையாசிரியர்

தொல்காப்பியச் செல்வர், சித்தாந்த நன்மணி, பண்டித வித்துவான்
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பி. எச்டி.,
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி
திருப்பனந்தாள்.

ஸ்ரீ காசிமடம் 1995 திருப்பனந்தாள்

Koviloor Digital Library

நான்காம் பதிப்பு

பிரதிகள் 1000

விலை ரூ. 3-50

கிடைக்குமிடம்
மேலாளர்,
ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்—612504,
தஞ்சைமாவட்டம்.

அச்சும் கட்டும்

ஸ்ரீ குமரகுருபரர் அச்சகம்

ஸ்ரீ காசிமடம்

திருப்பனந்தாள்.

Koviloor Digital Library

செந்திலாண்டவன் துணை

பதிப்புரை

ஓதும் வேதாந்தமென்ற உச்சியில் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

சைவ சமயத்தில் திருவுந்தியகர், திருக்களிற்றுப் படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய பதினான்கு நூல்களையும் சைவ சித்தாந்தச் சாத்திர நூல்கள் என வழங்கப்படும். இவைகளை மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் கூறப்படும்.

"உந்தி களிறுஉயர் போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் — வந்தஅருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று" — என்ற

பழைய வெண்பாவும் இந்நூல்களைப் புலப்படுத்தும். இச் சாத்திர நூல்களுள் ஒன்றாக விளங்கும் இவ்வுண்மை விளக்கம் வினாவும் விடையுமாகக் கூறுமுகத்தான் வெண்பா யாப்பால் அமைந்தது. சைவ சித்தாந்த நூல்களை முறையாகக் கற்க விரும்புபவர் திருவருட்பயன், உண்மை விளக்கம் என்ற இரு நூல்களையும் முதற்கண் கற்றல் மரபாகும்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபர் "கயிலை மாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இச் சாத்திர

Koviloor Digital Library

நூல்கள் அனைத்தும் தக்க உரையுடன் குறைந்த விலையில் ஸ்ரீ காசிமடத்தின் வெளியீடாக வெளிவர வேண்டும் என்பதும், அதன் மூலம் சைவ அன்பர்கள் படித்துச் சைவ சித்தாந்தத்தை நன்கு உணர்தல் வேண்டும் என்பதும் தமது திருவுள்ளத்தில் எண்ணிய சீரிய எண்ணமாகும். எனவே அவர்கள் அருளாணையின் வண்ணம் இந்நூல் நான்காவது பதிப்பாகப் பதிப்பித்து விஜயதசமி வெளியீடாக 3—10—95 அன்று வெளி வருகிறது. சைவ அன்பர்கள் இந்நூலை வாங்கிப் பயன் பெறுதலே ஸ்ரீலஸ்ரீ காசி வாசி சுவாமிகள் அவர்கட்குச் செய்யும் கைம்மாறாகும்.

இந்நூலுக்குத் தெளிவுரையும், விளக்கவுரையும் ஆராய்ச்சி முன்னுரையும் தமது ஆழ்ந்த சித்தாந்தப்புலமை தோன்ற எழுதி உதவிய முனைவர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ, பி. எச்டி, அவர்கட்கும், அச்சிடுங்கால் பிழை திருத்தம் முதலியன செய்து உதவிய புலவர் மு. குஞ்சிதபாதம், புலவர் அரங்க. சிவப்பிரகாசம் ஆகியவர்க்கும் செந்திலாண்டவன் திருவருள் நலம் உண்டாவதாக.

நூல் வெளியிடும் இச்சிறப்பு மிக்க பணியில் அடியேனையும் ஈடுபடுத்தியருளிய கருணைத் தடங்கடலாகிய **ஸ்ரீலஸ்ரீ காசி வாசி எஜமான் சுவாமிகள்** அவர்களின் திருவடிக் கமலங்கட்கு மன மொழி மெய்களால் ஆகிய எனது பணிவான வணக்கங்களைச் செலுத்திக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்

ஸ்ரீமத் குமாரசுவாமித்தம்பிரான்,
காறுபாறு.

Koviloor Digital Library

KOVILOOR VE...NTA MUTT

ஆராய்ச்சி முன்னுரை

சைவசித்தாந்தச் செந்நெறியை விளக்கும் நூல்கள் பல எனினும் மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தை மையமாகக் கொண்டு அதற்கு முன்பும் பின்புமாகத் தோன்றிய பதினான்கு நூல்களை மெய் கண்ட நூல்கள் என வழங்கி வருதலே மரபாகவுள்ளது. இவை பன்னிரண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டிற்கு உட்பட்ட காலத்தில் தோன்றியனவாகும். இவ்வாறு கூறப்படும் நூல்கள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபாஇருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாம். இப்பதினான்கு நூல்களும் இறைவனை முதன்மையாகக் கொண்டு வளர்ந்த உபதேச பரம்பரையில் வந்தனவாம்.

உண்மை விளக்கம் :

சைவசித்தாந்தச் செந்நெறியினர் உணர வேண்டிய உண்மைகள் பலவற்றையும் சுருக்கமாக விளக்கிக் கூறுதலின் இந்நூல் உண்மை விளக்கம் எனப்பெயர் பெற்றது. வெண்பா யாப்பில் அமைந்தது. மாணாக்கர் கேட்கும் வினாக்களை உளங்கொண்டு அவற்றிற்கு விடை கூறுவதாக அமைந்தது. இந்நூற்கண் காப்பாக அமைந்த பாடல் ஒன்றுடன் ஐம்பத்து நான்கு பாடல்கள் உள்ளன.

Koviloor Digital Library

நூற்சிறப்பு :

இந்நூல் பாடல் தொகையால் சிறிதாக இருப்பினும், மாணுக்கர் கேட்பதாக அமைந்த ஏழு வினுக்களுக்கும் அவற்றின் இயைபாகக் கேட்கப்படும் இருவினுக்களுக்கும் விடையிறுப்பதாக உள்ளது. அவ் வினுக்கள் அமைந்திருக்கும் முறையும் அதற்கு ஆசிரியர் விடைகூறும் முறையும் எளிமையும் சுவையும் தருவனவாகும். இறுதியாகத் திருவைந்தெழுத்தின் பெருமை கூறிய ஆசிரியர் அதனுல் பெறும் முத்திப்பேற்றின் விளைவையும் தகவையும் தருவதோடு அதற்குக் காரணமாய குருலிங்க சங்கம வழிபாட்டினையும் கூறி நூலை நிறைவு செய்துள்ளார். இவ்வரிய பொருள்களுள் நாதன் நடம் எனக் கூறப்பெறும் கூத்தப்பெருமானின் ஆடல் தகமையும், அதன் பயனும் இடம் பெற்றிருப்பது இந்நூற்கு அமைந்த தனிச்சிறப்பாகும்.

நுவலும் பொருள்:

இந்நூற்கண் அமைந்த முதற்பாடல் தம் குருமூர்த்தியினிடத்துச் சில வினுக்களை வினவுதற்குரிய விண்ணப்பத்தைத் தக்கூறுவதாகும். இவ் வினுக்கள் உண்மைப் பொருளை அறிய வினவுவதால் இவற்றைச் ‘சுத்த வினு’ என்று அருளுகின்ருர். அவையாவன:- 1. முப்பத்தாறு தத்துவங்கள் எனக் கூறப்படுபவை எவை? 2. ஆணவம் என்பது யாது? 3. கன்மம் என்பது யாது? 4. இவற்றினின்றும் நீங்காத உயிரின் இயல்பு யாது? 5. இக்கட்டுக்களினின்றும் நீக்கி உயிரை ஆட்கொள்ளும் இறை இயல்பு யாது? 6. தில்லைப்பெருமானின் திருக் கூத்தின் இயல்பு யாது? 7. திருவைந்தெழுத்தின் உண்மை யாது? என்பன.

1. தத்துவங்கள் :

இவை முப்பத்தாறுகும் 4 முதல் 21 வரையுள்ள பாடல்கள் இவற்றை விளக்குவதாகும். இவற்றை அடுத்திருக்கும் viii ix ஆவது பக்கங்களில் காண்க.

Koviloor Digital Library

ஆன்ம தத்துவம் - 24

1. ஐம்பெரும் பூதங்களும் அவற்றின் குணம் தொழில் குறிகளும்: 5

பூதங்கள்	வடிவு	நிறம்	எழுத்து	அடையாளம்	அதிதெய்வம்	தொழில்	குணம்
நிலம்	நாற்கோணம்	பொன்மை	ல	வச்சிரம்	நான்முகன்	படைத்தல்	திண்மையானது
நீர்	அரைமதி	வெண்மை	வ	தாமரை	மால்	காத்தல்	குளிர்ந்தது
தீ	முக்கோணம்	செம்மை	ர	சுவத்திகம்	உருத்திரர்	அழித்தல்	எரிப்பது
காற்று	அறுகோணம்	கருமை	ய	அறுபுள்ளி	மகேசுவரர்	மறைத்தல்	எங்கும் பரந்திருப்பது
விண்	வட்டம்	புகைநிறம்	அ	அமுதத்துளி	சதாசிவர்	அருளல்	எங்கும் நிறைந்திருப்பது

2. பொறி - புலன் : 10

பொறி — புலன்

மெய்: காற்றிடமாக நின்று ஊற்றின்பத்தை அறியும்
வாய்: நாக்கிடமாகக் கொண்டு சுவைவை அறியும்.
கண்: நெருப்பிடமாக நின்று உருவைக் காணும்.
மூக்கு: மண் இடமாக நின்று நாற்றத்தை அறியும்
செவி: விண் இடமாகக்கொண்டு ஓசையை அறியும்

3. தொழிற்பொறிகளும் அவை தொழிற்படுமாறும் : 5

சொல்: வானிடமாக நின்று ஒலிக்கும்
கால்: காற்றிடமாக நின்று நடக்கும்
கை: நெருப்பிடமாக நின்று இடுதலையும் ஏற்றலையும் செய்யும்
எருவாய்: நீரிடமாக நின்று மலம் நீரினைப் பிரிக்கும்
கருவாய்: மண்ணிடமாக நின்று விந்துவை வெளிப்படுத்தும்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4. உட்கருவிகளும் அவற்றின் தொழிலும் - 4

மனம் பற்றும்
புத்தி உறுதிப்படுத்தும்
ஆங்காரம் பலமுறையும் ஒன்றைப்பற்றி எழும்
சித்தம் தம்மிடத்து உற்ற பொருளைச் சிந்திக்கும்

வித்யா தத்துவங்கள் - 7

காலம்: முக்காலத்தையும் விளக்கும்
நியதி: உயிர் செய்யும் வினைப்பயன் அதனைச் சாருமாறு வரையறைப்படுத்தும்
கலை: ஆணவத்தைச் சிறிது நீக்கி உயிருக்குத் தொழில் செய்யும் ஆற்றலை எழுப்புவிக்கும்
வித்தை: உயிர் விரைவில் அறியும் ஆற்றலை எழுப்புவிக்கும்
அராகம்: பெற்ற பெருளைச் சிறிதாக்கிப் பெருத பொருளில் விருப்பத்தை உண்டாக்கும்
புருடன்: உயிர் ஐம்புலன்களை நுகருங்கால் அப்பொருளில் அதனை அழுந்துவிக்கும்
மாயை: ஒன்றையும் நினைய ஒட்டாமல் மயக்கத்தைச் செய்யும்

சிவதத்துவம் - 5

சுத்தவித்தை: அறிவு மேற்படத் தொழில் குறைந்து நிற்கும்
ஈசுரம்: தொழில் மேற்பட அறிவு குறைந்து நிற்கும்
சதாசிவம்: அறிவும் தொழிலும் ஒத்து இருக்கும்
சத்தி: தொழிற்படுத்தும்
சிவம்: அறிவாயிருக்கும்

2. ஆணவம்:

இது உயிர்க்கு என்றும் அறியாமையைச் செய்யும்

3. கன்மம்:

இது உயிர் நுகரும் இன்ப துன்ப வினைவாகும்.

4. உயிர்:

அறிவுடைய பொருளின் முன் அறிவற்ற பொருள்கள் விளங்கித் தோன்றுமையானும், அறிவற்ற பொருள் அறிவுடைப் பொருளைக்

Koviloor Digital Library

காண்டற்கியலாமையானும் இவ்விரண்டின் இடமாக அதுவும் அதுவாய் இருந்து அறிவு அறியாமை ஆகிய இரண்டையும் பெற்று நிற்பது உயிராகும். ஆறு சுவைகளும் தம்மைத் தாம் அறிவதில்லை. நாவுடைய ஒருவனே அச்சுவைகளின் இயல்பை அறிவன். அதைப் போன்றே முப்பத்தாறு தத்துவங்களும் தம்மைத்தாம் அறியா. அவற்ருேடு பொருந்தி நின்று அறிவது உயிரே ஆகும்.

5 இறை இயல்பு:

கதிரவனின் ஒளி கண்ணுக்குத் துணையாக நின்று பொருளைக் காட்டி நிற்பது போல, இறைவனும் உயிர் அறிவில் பொருந்தி நின்று அறிவித்தருளுவன். இது இறைவன் வேருகி நின்று உதவுதலாம். ஐம்பொறிகளும் உயிரின் துணை கொண்டே செயல்படினும் நமக்குத் துணை உயிரே என அவை அறிவதில்லை. அதைப்போன்றே உயிரும் தனக்குத் துணையாக நிற்பது இறைதான் என அறிவதில்லை ஆயினும் இறைவன் கண்ணுக்குப் புலனுகாது உயிரிடத்து எஞ்ஞான்றும் நீங்காது நின்று அறிவித்து வருவான். இது இறைவன் ஒன்ருகி நின்று உதவலாம். எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதன்மையும் துணைமையும் உடையதாதல் போல, உயிர்க்கெல்லாம் இறைவனே முதன்மையும் துணைமையும் உடையவன் ஆவன். இது இறைவன் உடனுய் நின்று உதவுதலாம்,

6. திருக்கூத்தின் இயல்பு:

அ. திருவைந்தெழுத்தைத் திருமேனியாகக் கொண்டருளல் உயிர்க்குயிராக இருந்து கூத்தியற்றும் பெருமான் சிவாயநம எனும் திருவைந்தெழுத்தையே திருவுருவமாகக் கொண்டு உயிர்களுக்குப் பிறவி அற ஆடல் செய்வன். துடி ஒலிக்கும் கையில் சிகரமும், நன்ருக வீசியிருக்கும் கையில் வகரமும், அமைந்த திருக்கரத்தில் யகரமும், தீயேந்திய கையில் நகரமும், முயலகனை மிதித்திருக்கும் திருவடியில் மகரமும் அமைந்திருக்கும். இதைப்போன்றே நமசிவாய எனும் திருவைந்தெழுத்தும் பெருமானின் திருவுருவில் அமைந்து நிற்கும் எல்லோரும் நாடிநிற்கும் தூக்கிய திருவடியில் நகரமும், திருவுந்தியில் மகரமும், திருத்தோளில் சிகரமும், திருமுகத்தில் வகரமும், திருமுடியில் யகரமும் கொண்டருளி ஆடுவன் ஓங்காரமாகிய பிரணவமே நல்ல திருவாசியாகவும் அதனைவிட்டு நீங்காத திருவைந்தெழுத்தே உள்ளொளியாய இறையாகவும் அமைந்துள்ளது. தில்லைப்பெருமானின் திருக்கூத்தாகிய இதனை ஆணவமற்ருர் அறிவர் இத்திருக்கூத்தினைக் கண்டு வழிபடுவார் பிறப்பு இறப்பு அற்றவர் ஆவர்.

Koviloor Digital Library

ஆ. ஊன நடனம்: உடுக்கை யேந்திய கையால் படைப்பையும், அமைந்த திருக்கையால் காத்தலேயும், நெருப்பேந்திய கையால் அழித்தலேயும், ஊன்றிய திருவடியால் மறைத்தலேயும், தூக்கிய திருவடியால் அருளலேயும் செய்தருளுகின்றான்.

இ. ஞான நடனம்: உடுக்கையேந்திய கையால் மாயையை உதறியும், நெருப்பேந்திய கையால் கன்மத்தைச் சுட்டும், ஊன்றிய திருவடியால் ஆணவமலத்தின் வலிமையைக் கெடுவித்தும், தூக்கிய திருவடியால் அருளலேச் செய்தும் ஆட்கொள்ளுகின்ற பெருமான், உயிர்கள் மாட்டு வைத்த கருணையால் தன் திருவடிக் கீழ் உயிர்களே அழுத்திப் பேரின்பத்தைத் துய்க்கச் செய்தல், தன் அமைந்த கரத்தால் ஆம்.

ஈ. ஆனந்த நடனம்: ஞானியர் தன்முனைப்பற்ற இடத்தில் தோன்றியருளும் இத்திருக்கூத்தின் இன்பத்தைத் திருவருளால் நுகர்ந்து இன்புறுவர்.

உ. வழிபாட்டின் பயன்: மாற்றம் மனங்கழிய நின்ற மறையோன் திருவைந்தெழுத்தினுலாய திருமேனியுடன் உமையை இடமாகக்கொண்டு அப்பெருமாட்டி காணுமாறு ஆடியருளும் இத்திருக்கூத்தினைக் கண்டு இன்புற்றவர்க்குப் பிறவி இல்லையாம்.

7. திருவைந்தெழுத்தின் உண்மையும் பெருமையும்:

எழுத்துக்கள் எல்லாம் அழியும் தன்மையவே. அந்நிலையில் திருவைந்தெழுத்தும் அழியுந் தன்மையதோ என வினவிய மாணுக்கருக்கு அதன் உண்மையை ஆசிரியர் அருளுகின்றார். எல்லா மொழிகளிலும் பொருளைக் குறித்தற்கு இடனாக நிற்கும் சொற்களும், அவற்றிற்கு உறுப்பாய எழுத்துக்களும் அழிதற்குக் காரணம் அவற்றால் குறிக்கப்படும் பொருள் அழியும் தன்மையாயிருத்தலினலேயாம். ஆனல் திருவைந்தெழுத்தால் குறிக்கப்படும் பொருள், இறையும் அருளும் உயிரும் மறைப்பாற்றலும் மலமுமாய் இருத்தலின் அவை என்றும் அழியாதனவாம். ஆதலின் திருவைந்தெழுதது அழியாததாம். நகரத்தை முன்னாக வைத்து ஓதும் (நமசிவாய) திருவைந்தெழுத்து முத்திக்கும் ஏதுவாதல் இல்லை. ஆதலின் சிகரத்தை முன் வைத்து ஓதும் (சிவாயநம) திருவைந்தெழுத்தையே மனத்தகத்து எண்ணுதல் வேண்டும். சிகரத்தை முன்னாக வைத்து ஓதும் இத்திருவைந்தெழுத்தை இடைவிடாது

Koviloor Digital Library
எண்ணின் திருவருள் மல இருள் நீக்கிச் சிவத்தை அடைவிக்கும். இறைவன் அருளிய வேதங்களும் ஆகமங்களும் இத்திருவைந் தெழுத்தின் பெருமையையே நுவலுகின்றன. தலைமை வாய்ந்த புராணங்களும் அவ்வாறு கூறுகின்றன. இறைவனின் திருக் கூத்தும் அதனல் ஆயதே. முத்தியின்பமும் அதனல் பெறுதற்குரிய தாகும்.

8. முத்தியின் இயல்பு:

வீடுபேறு அடைந்தோர் பழமும் அதன் சுவையும் போலவும் மலரும் அதன் மணமும் போலவும், நெருப்பும் அதன் வெம்மையும் போலவும், வீணையும் அதன் ஒலியும் போலவும், திருவருளோடு பிரிவின்றிக் கலந்து நிற்பர். உயிர் உடலோடு கட்டுண்ட நிலையில் தத்துவங்களோடு எவ்வாறு பிரிவின்றி நின்றதோ, அதைப் போன்றே வீடுபேற்றின்கண் திருவருளோடு பிரிவின்றி இயைந்து, நிற்கும். ''ஆணவத்தோடு அத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத் தாணுவினேடு அத்துவிதம் ஆகும் நாள் எந்நாளோ'' எனத்தாயு மானவர் கூறுவதும் காண்க. கதிரவன் ஒளியில் மதியத்தின் ஒளி அடங்கி நிற்பது போல இறைவன் திருவடியில் உயிர் தன்முனைப் பற்று நிற்கும் வீடுபேற்றின் கண், இறைவன் உயிரிடத்துச் சென்று ஒன்றுவனே? அல்லது உயிர் இறைவனிடத்துச் சென்று ஒன்றுமோ? என வினவற்க, இறைவன் உயிரிடத்துச் சென்று ஒன்றுவனுயின் இறைவனின்றும் உயிர் பிரிந்து நிற்க வேண்டும். உயிர் இறைவ னிடத்துக் கூடுமாயின் இறைவன் எங்கும் நிறைந்தவன் என்னும் அவன் நிறைவுக்குப் பொருந்தாதாகும். ஆதலின் குருடனுக்குக் கண்ணின் படலம் நீங்கிய காலத்துக் கதிரவன் ஒளியும், கண்ஒளி யும் கலந்து நிற்குமாறு போல, உயிரிடத்து ஆணவம் நீங்கிய விடத்து இறையும் உயிரும் கலந்து நிற்கும் என்பதாம்.

9. உயிரும் தளையும்:

உயிரும் தளையும் இறையைப் போன்றே காலம் கடந்து நிற்பன எனில் வீடுபேற்றின்கண் இவ்வுயிரும் தளையும் இயைந்து நிற்குமாறு எங்ஙனம்? என வினவிய மாணக்கருக்கு ஆசிரியர் விடை கூறுகின்ருர். வீடுபேற்றின்கண் இறைவன் உயிர்க்கு இன்பத்தை வழங்குவன். உயிர் அதனை ஏற்றுஇன்புறும். அப்பேரின்பத்தை மேன்மேல் நுகர்தற்குத் தளை துணையாக நிற்கும்.

Koviloor Digital Library

10 வீடடைதற்குரிய வாயில்:

வீடுபேறு அடைதற்குரிய வாயில் யாதென வினவிய மாணுக்கருக்கு ஆசிரியர் விடை கூறுகின்ருர், குருவழிபாடு, இலிங்கவழிபாடு, அடியவர் வழிபாடு ஆகிய மூன்றுமே பிறப்பு, இறப்பு அற்ற வீடுபேறு அடைதற்கு வாயிலாகும். ஈன்று அணிமையுடைய கன்றை நோக்கித் தாய்ப்பசு கசிந்து உருகுவது போல, ஞானியரும் இம்மூவகை வழிபாடுகளிலும் கனிந்து வழிபட்டு நிற்பர்.

11 நன்றியறிதல்:

தான் கேட்ட வினக்களுக்கு எல்லாம் ஆசிரியர் விடை அருளியதைக்கேட்ட மாணுக்கர் தன் ஆசிரியர்க்கு நன்றி தெரிவிக்கும் பாடலாக 53-வது பாடல் அமைந்துள்ளது. மெய்கண்டதேவே! நீர் அருளிய மெய்ப்பொருள்களைக் கேட்டமையால் பிறவிக்கட்லில் அழுந்தாது வீடுபேற்றை அடையும் வாழ்வைப் பெற்றேன்.

நூலாசிரியர்:

இந்நூலை அருளியவர் 'மனமாசகங்கடந்தார், என்பார். திருவதிகைப் பதியினர். இக்குறிப்பினை,

மன்னதிகை வாழும் மனவா சகங்கடந்தான்
மின்னனைய வாழ்விலுரு மெய்கண்டான்—பன்னுமறை
வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
உண்மை விளக்கம் செய்தான் உற்று.

எனவரும் இதன் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம்.] மெய்கண்டாரின் மாணுக்கராக இருந்தவர்கள் நாற்பத்தொன்பது பேர் என்பர். இப்பாயிரம் இவ்வாசிரியரை மெய்கண்டாரின் மாணுக்கர் எனக்குறிப்பிடுவதால் சிவஞான சித்தியார் அருளிய அருணந்தி சிவாச்சாரியாரோடு இவர் ஒரு சாலை மாணுக்கர் ஆவர் என்பது விளங்கும். திருவதிகையில் இவர் பெயரால் தெற்கு வீதியில ஒரு| திருமடம் உள்ளது இவையன்றி இவரைப் பற்றிய வேறு வரலாறு ஏதும் தெரிந்திலது. இறைவனை மனவாசகங் கடந்தான் என மணிவாசகர் அழைப்பர்.

எனைநான் என்பது அறியேன்பகல் இரவு ஆவதும் அறியேன்
மனவாசகம் கடந்தான் எனைமத்த உன்மத்தன் ஆக்கி
சினமால்விடை உடையான் மன்னு திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைச் செய்த படிறு அறியேன் பரம்சுடரே.

Koviloor Digital Library

என்பது இவர் திருவாக்கு ஆகும். 'மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே, எனப் பிறிதோரிடத்து அழைப்பதும் ஈண்டு எண்ணல் தகும். எனவே இவ்வாசிரியரின் பெற்றோர் இவ்வரிய நினைவுகூறும் முகமாக இவருக்கு இப்பெயரிட்டிருப்பது அவர்தம் சமய மாண்பை விளக்கும். இத்தொடரையே பிறிதொருவாருக இந்நூலில் நாற்பத்தொன்பது பாடலில்

„வாக்கு மனமிறந்த வான் கருணையாளன் உருத்
தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா"

என ஆசிரியர் அருளுவர்.

காலம்:-

மெய்கண்டாரின் காலம் கி. பி. 1232-ஐ ஒட்டியது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். எனவே அவர்தம் மாணுக்கராகிய இவ்வாசிரியரின் காலமும் அதுவே என்பதில் ஐயமில்லை, எனுனும் திருவதிகையிலிருக்கும் கல்வெட்டொன்ருல்இவ்வாசிரியரின் காலம் கி. பி. 1100—1200 ஆக இருக்கலாம் எனத் துணிதற்கு இடனுண்டு என்பர் திரு. மு. அருணசலம் பிள்ளை அவர்கள். அக்கால எல்லை உறுதிப்படுமாயின் மெய்கண்டார் காலமும் அதுவாகத்துணிய இயலும். இந்நூல் செய்த காலம் கி. பி. 1265 என்றல் மரபு.

Koviloor Digital Library

உ

பொருளடக்கம்

பதிப்புரை	iii
ஆராய்ச்சி முன்னுரை	vi
உண்மை விளக்கம் தெளிவுரை	1-29
செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	30

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருச்செந்திலாண்டவன் துணை

உண்மை விளக்கம்

தெளிவுரை

KOVILOOR VEDANTA MUTT

காப்பு

மூத்த பிள்ளையார் வணக்கம்

வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
உண்மை விளக்கம் உரைசெய்யத்—திண்மதம்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற்று ஐங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம்.

பொழிப்புரை: மெய்யுணர்வின் வளத்தை விளக்கிச் சொல்லும் சிவாகமங்களில் கூறப்பெற்ற இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள்களின் உண்மை இயல்புகளைக் குற்றமற்ற உண்மை விளக்கம் என்னும் இந்நூலால் யாம் எடுத்துரைக்க வலிமை மிக்க மதநீர் சொரிகின்ற மாலை வானத்தை யொத்த சிவந்த நிறமுள்ள யானை முகத்தையும் பருத்த வயிற்றையும், ஐந்து திருக்கரங்களையும் உடைய மூத்த பிள்ளையாரை எமது அறியாமை கெடுமாறு மனத்தகத்து வைத்து வழிபடுவோம்.

விளக்கவுரை: இந்நூலாசிரியர் தவத்தால் மனந்தூயராய் முக்குணங்களையும் கடந்த அருளாளர் ஆவர். ஆதலின் இந்நூலை முற்ற முடித்தற்கு எத்தகைய இடையூறுகளும் இவர்பால் அணுகா; எனினும் நூல் செய்வார் செய்யும் மரபு காத்தற் பொருட்டும், இந்நூல்வழிக் கற்றுணர்ந்து மெய்யுணர்வு பெறுவார் பொருட்டும் இவ்வணக்கத்தை ஆசிரியர் செய்துள்ளார். புந்தியுள் வைப்பாம் என்றது இந்நூல்வழிக் கற்றுணர்வாரை உளப்படுத்திக் கூறிய தாகும். திண்மதம் சேர் என்றது யானையின் பொதுமை பற்றிய தாம் உயிர் உய்தி பெறுவதற்காம் மெய்யுணர்வைத் தருதலின், ''வண்மை தரும் ஆகமநூல்'' என்றார்.

Koviloor Digital Library

நூல்

குருமூர்த்தியிடம் விண்ணப்பித்தல்

பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதானந்தப் பொருளாம்
மெய்காட்டும் மெய்கண்டாய்! விண்ணப்பம்—பொய்காட்டா
மெய்யா! திருவெண்ணெய் வித்தகா! சுத்தவினு
ஐயா! நீ தான்கேட் டருள்.

பொ-ரை: தம்பால் வந்தடைந்தோருக்கு நிலையாமையை அறிவுறுத்தி அதற்கு உரியதாய நிலையில் பொருள்களின் தொடர் பினையும் கழிப்பித்து உண்மை அறிவு ஆனந்த வடிவாக விளங்கி நிற்கும் சிவபரம் பொருளைக் காட்டவல்ல மெய்கண்ட தேவே! நிலையில் பொருளின் வயப்படாத அருள் உருவை உடையவரே! திருவெண்ணெய் நல்லூரின்கண் எழுந்தருளியுள்ள சதுரப்பாடு உடையவரே! அடியேனை ஆட்கொண்டருளுகின்ற குருமூர்த்தியே! ஒரு விண்ணப்பம். அடியேனது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துதற் குரிய சில வினுக்களைத் திருச்செவிபேற்று அவற்றிக்குரிய விடை யினை அருளிச்செய்து ஆட்கொண்டருள்வீராக!

வி-ரை: மெய் போதானந்தப் பொருளாம் எனக் கூட்டுக. மெய் - உண்மை. போதம் - அறிவு ஆனந்தம் - இன்பம். சச்சிதானந்தம் என்பதும் அது. வித்தகம் - சதுரப்பாடு: ஆற்றல் அதாவது தன்னை அறிவித்துத் தான்தானுய்ச் செய்யும் தகைமை. தான் - அசைநிலை. 1

விண்ணப்பம்

ஆருறு தத்துவம் ஏ(து) ஆணவம் ஏ(து) அன்றேதான்
மாரு வினையேது? மற்றிவற்றின் — வேருகா
நான் ஏ(து) நீ ஏ(து) நாதன்நடம் அஞ்செழுத்துத்
தான்ஏது? தேசிகனே! சாற்று.

பொ-ரை: குருமூர்த்தியே! முப்பத்தாருக வைத்து எண்ணப் படும் தத்துவங்களின் இயல்புயாது? ஆணவம் என்பது யாது? தொன்றுதொட்டு ஆணவத்தோடு தொடர்ந்துவரும் கன்மத்தின் இயல்பு யாது? இம்மாயை ஆணவம் கன்மம் ஆகியவற்றினின்றும் வேருகாது அவற்றின் வயப்பட்டு நிற்கும் உயிரின் இயல்பு யாது? இறையின் இயல்பு யாது? அவ்விறைவன் நடம்புரியும் இயல்பு யாது? திருவைந்தெழுத்தின் இயல்பு யாது? தான்' ஆதல் என்னும் முத்தியின் இயல்பு யாது? இவ்வினுக்களுக்கு விடை அருள்வீராக!

Koviloor Digital Library

வி-ரை தான், மற்று-அசைநிலைகள், மாயை (தத்துவங்கள்), ஆணவம், கன்மம், உயிர், இறை, ஆனந்தக்கூத்து, திருவைந்தெழுத்து, முத்தி ஆகிய இவ்வெட்டிற்கும் விளக்கம் கூறுவனவே பின்வரும் பாடல்களாகும்.

குருமூர்த்திகள் திருவுளம் பற்றல்

உள்ளபடி இத்தை உரைக்கக்கேள் உன்தனக்கு
வள்ளல்அரு லால்அன்று வாய்மலர்ந்து—தெள்ளியசீர்
ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆனந்த
யோகம் நிகழ்புதல்வா உற்று.

பொ-ரை: பேரின்பத்தை அருளவல்லயோக நெறியில் நிற்கும் மாணுக்கனே! சிவபெருமான் தம் கருணையால் உலகைத் தோற்றுவிக்கும் காலத்திலேயே திருவாய் மலர்ந்தருளிய தெளிவும் சிறப்பும் உடைய சிவாகமங்கள் விளக்கிய நெறியில் நீ கேட்ட வினாக்களுக்குரிய விடைகளை உள்ளவாறு உரைப்போம். அவற்றை நீ ஒன்றியிருந்து கேட்பாயாக! 3

வி-ரை: ஏகாரம் அசைநிலை.

தத்துவங்கள்

ஆன்ம தத்துவங்கள்

ஐம்பெரும் பூதங்களும், அவற்றின் வடிவும்

நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி
ஏந்தும்அனல் முக்கோணம் எப்போதும்—ஆர்க்கும்
அறுகோணம் கால்வட்டம் ஆகாயம்; ஆன்மா
உறுகாயம் ஆம்இவற்றால் உற்று.

பொ-ரை: எக்காலத்திலும் நிலம் நாற்கோண வடிவாயது; நீர் பிறையின் அரைவட்ட வடிவாயது; நெருப்பு முக்கோணவடிவாயது; காற்று அறுகோண வடிவாயது; விண் வட்டவடிவாயது; இவ்வைம்பெரும் பூதங்களின் சேர்க்கையால் உயிர் தன்வினைக்கீடாகப் பருவுடம்பைப்பெறும் தகையது.

வி-ரை: ஆன்மா உறுகாயம் இவற்றால் உற்று ஆம் எனக் கூட்டுக. இவ்வைம்பெரும் பூதங்களின் சேர்க்கையால் உயிர் பருவுடம்பைப் பெருமாறு:- மண்ணில் இருந்து எலும்பு, தசை,

Koviloor Digital Library

தோல், நரம்பு, மயிர் ஆகியவையும்; நீரிலிருந்து மூத்திரம், உமிழ் நீர், வியர்வை, குருதி, விந்து ஆகியவையும்; தீயிலிருந்து உறக்கம், பசி, நீர் வேட்கை, சோம்பல், ஒன்றோடு ஒன்று சேர்தல் ஆகியவையும், காற்றிலிருந்து ஓடல், படுத்தல், நடத்தல், அமர்தல், தாண்டல் ஆகியவையும்; விண்ணிலிருந்து மயக்கம், ஆசை, வெறுப்பு, அச்சம், நாணம் ஆகியவையும் தோன்றும்.

பூதங்களின் நிறமும், எழுத்தும்

பொன்பார் புனல்வெம்மை பொங்கும் அனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்தூமம் – என்பார்
எழுத்து லவரயஅப் பாராதிக் கென்றும்
அழுத்தமதாய் நிற்கும் அது.

பொ-ரை: மண் பொன் நிறமாயது; நீர் வெண்ணிறமாயது, வளர்கின்ற நெருப்பு செந்நிறமாயது; வலிய காற்று கருநிறமாயது; பரந்துள்ள விண் புகைநிறமாயது; இம்மண் முதலிய ஐம்பெரும் பூதங்களுக்கும், உரிய வித்தெழுத்து முறையே லகரம், வகரம் ரகரம், யகரம், அகரம் ஆகும். இவ்வெழுத்துக்கள் இப்பூதங்களில் எஞ்ஞான்றும் இவ்வாறு அழுந்தி நிற்கும் என்பர்.

வி-ரை: ஐம்பெரும் பூதங்களும் அசைவு உடையனவே. சிலவற்றின் அசைவுகள் கண்ணுக்குப் புலனாகும்; சில புலனாகா. அவ்வசைவுகள் ஏற்படும்பொழுது எழும்ஒலியே இங்கு எழுத்துக்களாகக் குறிக்கப்படுகின்றன. இவற்றை ''பீஜ அட்சரம்'' என்பர். 5

பூதங்களின் அடையாளங்கள்

குறிகுலிசம் கோகனதம் கொள்சுவத்தி குன்று
அறுபுள்ளி ஆரமுத விந்துப் – பிறிவின்றி
மண்புனல்தீக் கால்வானம் மன்னும் அடைவேயென்று
ஒண்புதல்வா ஆகமம்ஓதும்.

பொ-ரை: அறிவுடைய நன்மாணாக்கனே! மண், வச்சிராயுதத்தையும், நீர் தாமரைப் பூவையும், தீ சுவத்திகத்தையும், காற்று கெடாத அறும்புள்ளிகளையும், விண் இனிமை நிறைந்த அமுதத் துளியையும் நீங்குதல் இன்றித் தமக்குரிய அடையாளமாகக் கொண்டு பொருந்தியிருக்கும் எனச் சிவாகமங்கள் சொல்லும்.

வி-ரை: சுவஸ்திகம் - இருதலை மேழி: (Swastik), விந்து - துளி 6

Koviloor Digital Library

பூதங்களுக்குரிய அதிதெய்வங்களும், அவர்களின் தொழில்களும்

பாராதி ஐந்துக்கும் பன்னும்அதி தெய்வங்கள்
ஆரார்? அயனாதி ஐவராம் — ஓரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்கால் தோற்றமுதல் ஐந்தும்
பழுதறவே பண்ணுவர்கள் பார்.

பொ-ரை: மண் முதலிய ஐம்பெரும் பூதங்களுக்கும், சிவாகமங்கள் கூறும் அதிதெய்வம் யார்? எனில் அவர்கள் அயன் முதலாகிய ஐவருமாம். அவ்வைவருக்கும் ஒவ்வொரு தொழிலைச் சொல்வதாயின் அவர்கள் படைப்பு முதலிய ஐவகைத் தொழில்களையும் குற்றமறச் செய்பவர்கள். இதைச் சிந்தித்துத் தெளிவாயாக!

வி-ரை: ஏகாரம் அசைநிலை. 7

ஐவகைத் தொழில்களும் அவர்க்குரியவாதல்

படைப்பன் அயன் அளிப்பன் பங்கயக்கண் மாயன்
துடைப்பன் உருத்திரனும் சொல்லின் திடப்பெறவே
என்றும் திரோபவிப்பர் ஈசர் சதாசிவரும்
அன்றே அநுக்கிரகர் ஆம்

பொ-ரை: மேற்கூறிய தொழில்களை வகுத்துரைப்பின் அயன் படைப்பன்; தாமரை போன்ற கண்களை உடையனாகிய திருமால் காப்பன்; உருத்திரன் அழிப்பன்; உயிர்கள் பக்குவம் பெறுதற் பொருட்டு மகேசுரர் என்றும் மறைப்பர்; அங்ஙனம் பக்குவம் பெற்ற அப்பொழுதே சதாசிவர் வீடுபேறு கொடுத்து அருளுவர்.

வி-ரை: ஏகாரம் அசைநிலை. திடம்பெற என்பது எதுகை நோக்கித் திரிந்தது. இறைவன் உயிர்களுக்கு மாயையிலிருந்து உடல், கருவி, உலகு ஆகிய நுகர் பொருள்களை ஆக்கிக் கொடுத்தலே படைப்பாகும்; அவற்றை நிலைபெறச் செய்து துய்க்க வைப்பதே காத்தலாகும்; அவற்றை மீளவும் மாயையில் ஒடுக்குவதே அழிப்பாகும். இம் முச்செயல்களும் மாயையில் நிகழ்வனவாம். உயிர்களுக்கு உடல் வாயிலாகப் பிறப்பு இறப்பினை வழங்கி அவற்றிற்குரிய இன்ப துன்பங்களை ஊட்டுவிப்பதே மறைப்பாகும்; உயிர்களுக்குப் பாசத்தை நீக்கி வீடுபேற்றை அருளுவதே அருளாகும் இவ்விரு செயல்களும் உயிர்களிடத்தில் நிகழும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நான்கையும்

Koviloor Digital Library
பந்தம் என்பர்; அருளினை வீடுபேறு என்பர். இவ்வவைந் தொழில்களில் மறைத்தலைக் காத்தலிலும். அருளலை அழித்தலிலும் அடக்கி முத்தொழிலாகக் கூறுவதும் உண்டு.

பூதங்களின் குணமும், தொழிலும்

மண்கடின மாய்த்தரிக்கும்; வாரிகுளிர்ந் டதபதமாம்;
ஒண் கனல் சுட்(டு) ஒன்றுவிக்கும்; ஓவாமல்—வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும்; பார்க்கில்ஆ காயம்
நிரந்தரமாய் நிற்கும்நிறைந்து.

பொ-ரை: ஐம்பெரும் பூதங்களின் குணம் தொழில்களை ஆராயின் மண் திண்மைக் குணத்தையும், பொருள்களைத் தாங்கும் தொழிலையும் உடையது; நீர் குளிர்ச்சிக் குணத்தையும், பொருள்களை மென்மைப்படுத்தி நனைக்கும் தன்மையும் உடையது. ஒளியுள்ள நெருப்பு வெம்மைக் குணத்தையும், பொருள்களை உருக்கி ஒன்றுவிக்கும் தொழிலையும் உடையது; வலிய காற்று ஒழிவின்றிப்பரவும் குணத்தையும் பொருள்களைத் திரட்டும் தொழிலையும் உடையது; விண் வெளிதாகிய குணத்தையும், எப்பொருள்களிலும் கலந்து நிறைந்து நிற்கும் தொழிலையும் உடையது.

வி-ரை: ஏகாரம் அசைநிலை. 9

ஐமபுலன்கள்

உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்தனக்குக்
கள்ளமிகும் ஐம்புலனும் கட்டுரைக்கில்—மெள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்
ஆசைதரும் ஐம்புலனே ஆம்.

பொ-ரை: நன்மாணக்கனே! இதுகாறும் உனக்கு ஐம்பெரும் பூதங்களின் இயல்பைச் சிவாகமங்களில் உள்ளவாறு கூறினோம். இனி மனத்தைத் தீநெறியில் கவரும் ஐம்புலன்களையும் எடுத்துக் கூறுவதாயின் அவை ஓசை, ஊறு. உரு, சுவை, நாற்றம் என்பனவாம்.

வி-ரை: ஈரிடத்தும் ஏகாரம் அசைநிலை மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலன்' என்றும்; மெல்லெனவே மொய்க்கும் நெய்க்குடம் தன்னை எறும் பெனவே' என்றும் கூறுவதால் ஐம்புலன்களின் கள்ளம் நன்கு விளங்கும். புலன் - தன்மாத்திரை.

Koviloor Digital Library

அறிவுப்பொறிகள் (ஞானேந்திரியம்)

ஞானேந் திரியங்கள் நன்று உரைக்கக்கேள்
ஊன மிகுபூதம் உற்றுஇடமா—ஈனமாம்
சத்தாதி யை அறியும் தானம் செவிதோல்கண்
அத்தாலு மூக்கென்று அறி.

பொ-ரை அறிவுப் பொறிகளின் இயல்பை நன்றாக உரைக்கின்றேம்; கேட்பாயாக! அவை தாமத குணம் நிறைந்த தன்மாத் திரைகளை இடமாகக் கொண்டு இழிந்த ஓசை முதலிய புலன்களை அறியும். தொழிற்படும் இடங்கள் முறையே செவி, தோல், கண், நா, மூக்கு என்பன. இதனை நன்கறிவாயாக!

வி-ரை: தாலு - நா. 11

ஐம்பொறிகளில் செவி, தோல், கண் ஆகியவை அறியுமாறு

வானிடமா நின்று செவி மன்னும் ஒலியதனை
ஈனமிகும் தோல்கால் இடமாக ஊனப்
பரிசந் தனை அறியும்; பார்வையிற்கண் அங்கி
விரவிஉரு வம்காணுமே.

பொ-ரை: காது வானை இடமாகக் கொண்டு ஒலியை அறியும். இழிவுமிக்க தோல் காற்றை இடமாகக் கொண்டு இழிந்த ஊற்றின் பத்தை அறியும்; கண் நெருப்பை இடமாகக் கொண்டு அதனொடு பொருந்தி உருவத்தைக் காணும்.

வி-ரை: ஏகாரம் அசைநிலை. பார்வையில் கண் என நின்ற உருபை அங்கியின் கண் எனப்பிரித்துக் கூட்டுக. ஈனம் இழிவையும் ஊனம் குறைவையும் விளக்கவந்தன். 12

நாக்கு, மூக்கு ஆகிய பொறிகள் அறியுமாறு

நன்றாக நீரிடமா நாஇரதம் தான்அறியும்;
பொன்று மணம்மூக்குப் பூவிடமா—நின்றறியும்;
என்றேதும் அன்றே இறைஆ கமம்இதனை
வென்றார்சென் றார்இன்ப வீடு.

பொ-ரை: நாக்கு நீரை இடமாகக் கொண்டு சுவையை அறியும், மூக்கு மண்ணை இடமாகக் கொண்டு மணத்தை அறியும்; இவ்வாறு சிவாகமங்கள் சொல்லும். இவ்வைம் பொறிகளையும் தத்தம்

Koviloor Digital Library

புலன்களில் சென்றவிடத்தால் செல்லாதவாறு தடுத்தவரே பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவர்.

வி-ரை: இரதம்-சுவை. 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு' 'உரனென்றும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து'; சென்றவிடத்தால் செலவிடாது தீதொரீ இ நன்றின்பால் உய்ப்பதறிவு' எனத்தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கூறுவனவும் காண்க. 13

தொழிற்பொறிகள் (கன்மேந்திரியங்கள்)

கண்ணுதல்நூல் ஓதியிடும் கன்மேந் திரியங்கள்
எண்ணம்வச னதிக்கு இடமாக—நண்ணியிடும்
வாக்குப்பா தம்பாணி மன்னு குதம்உபத்த
மாக்கருதும் நாளும் அது.

பொ-ரை: சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட சிவாகமங்கள் அறுதியிட்டுச் சொல்லும் தொழிற் பொறிகள் ஐந்தாம். அவை உரையாடல் முதலியவற்றை இடமாகப் பொருந்தும். அவ்விடங்கள் வாய், கால், கை, எருவாய், கருவாய் என்று கூறப்பெறும் எனத் தெளிவாயாக!

வி-ரை: கன்மம் - தொழில். பாணி - கை. குதம் - எருவாய். உபத்தம் - கருவாய். 14

தொழில் பொறிகளின் செயல் நிகழுமாறு

வாக்குஆகா யம்இடமா வந்துவச னிக்கும்; கால்
போக்காகும் காற்றிடமாப்; புல்கிஅனல்—ஏற்கும்
இடும்கை; குதம்நீர் இடம மலாதி
விடும்; பார்இடம்உபத்தம் விந்து.

பொ-ரை சொல் வானின் இடமாக வந்துவாயாகிய உறுப்பின் வாயிலாய் ஒலிக்கும்; கால் காற்றினிடமாக வந்து அக்காலின் வாயிலாகப் போக்கு வரவு புரியும்; கை நெருப்பை இடமாகக் கொண்டு இடுதலையும் ஏற்றலையும் செய்யும்; எருவாய் நீரிடமாகக் கொண்டு கழிவுப் பொருள்களைக் கழிக்கும்; கருவாய் நிலத்தை இடமாகக் கொண்டு விந்துவை வெளிப்படுத்தும்.

வி-ரை: வசனிக்கும் - உரையாடும். 15

Koviloor Digital Library

அந்தக் கரணம் அடைவே உரைக்கக்கேள்
அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் - சிந்தையிவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்து அங்(கு)
உற்றதுசிந் திக்கும் உணர்.

பொ-ரை: அகக்கருவிகள் நான்கையும் முறையாகயாம் சொல்லக் கேட்பாயாக! அவை மனம் புத்தி அகங்காரம் சித்தம் எனபனவாம். இவற்றுள் மனம் பொறிவழி வரும் புலன் ஒன்றைப் பற்றும்; அங்ஙனம் பற்றியதனைப் புத்தி இஃது இன்னது என உறுதி செய்யும்; ஆங்காரம் இச்செயல்களுக்குக் காரணமாய் அமைந்து யான் இதனைச் செய்வல் என முந்தும். சித்தம் இக்கருவி மூன்றனும் வரும் பயனைக் கவர்ந்து நினைவு வடிவில் நிற்கும் அவற்றை அறிவாயாக! 16

வி-ரை; அந்தக்கரணம்- அகக்கருவிகள்.

நுதலியதும், நுவலப் புகுவதும்

ஓதியிடும் நாலாறும் உரிறுஆனம தத்துவம்என்(று)
ஆதி அருள்நூல் அறையும்காண்—தீதுஅறவே
வித்தியா தத்துவங்கள் தம்மை விளம்பக்கேள்
உத்தமனே நன்று உனக்கு.

பொ-ரை; நன்மாணுக்கனே! யாம் இதுவரை கூறிய இருபத்து நான்கு தத்துவங்களையும் ஆன்ம தத்துவங்கள் எனச் சிவாகமங் கள் கூறும் இனி உனக்கு மயக்கம் நீங்க விளக்கமாக வித்தியா தத்துவங்களைக் கூறுகின்றோம். அவறறைக் கேட்பாயாக!

வி-ரை: காண் ஏ என்பன அசைநிலைகள். இதுகாறும் கூறப் பெற்ற இருபத்துநான்கு தத்துவங்களும் உயிர் நுகர்ச்சி பெறுவ தற்கு உற்ற கருவியாக அமைதலின் இவற்றை ஆன்ம தத்துவம் என்பர். 17

வித்தியா தத்துவங்கள்

காலம் நியதி கருதும் கலைவித்தை
ஏலஅரா கம்புருட னேமாயை —மால்அறஏழ்
சொன்னோம் அடைவாகச் சொன்னஇவை தம்முண்மை
உன்னி உரைக்கும்நாம் உற்று.

பொ-ரை: காலம், நியதி, கருதுதற்குரிய கலை, வித்தை, பொருந்திய அராகம், புருடன், மாயை ஆகிய ஏழுமே வித்தியா

Koviloor Digital Library

தத்துவங்கள் என்பனவாம். இவற்றை உனக்கு மயக்கம் தீ முறையாகக் கூறியுள்ளோம். இங்ஙனம் கூறப்பெற்ற தத்துவங்களின் உண்மையை நாம் உனக்கு விளக்கும் முறையை நினைந்து கூறுவோம். அவற்றைக் கடைப்பிடிப்பாயாக.

வி-ரை; மேற்கூறப்பெற்ற ஆன்ம தத்துவங்களோடு ஆன்மா இயைந்து உலக நுகர்ச்சியில் முயங்சி மயங்கிக் கிடக்குங்கால் அதற்கு அறிவு விளக்கம் தந்து, அந்நுகர்ச்சியில் நோக்குடையனாகச் செய்யும் கருவிகளே வித்தியா தத்துவங்கள் எனப்படும். 18

அவற்றின் தொழில்

எல்லை பலம்புதுமை எப்போதும் நிச்சயித்தல்
அல்லல் தரும்கிரியை ஆன்மாவுக்(கு)—ஒல்லை
அறிவு ஆசை ஐப்புலனும் ஆரவரும் காலம்
குறியா மயக்குளவாறு கொள்.

பொ-ரை: உயிர்களுக்குக் காலதத்துவம் இறந்த காலத்தின் எல்லையையும், நிகழ்காலத்துப் பயனையும், எதிர்காலத்துப் புதுமையையும் விளக்கும்; நியதி தத்துவம் எம்பொதும் வினைப்பயன் வினைமுதலைச் சாருமாறு நியமிக்கும்; கலை ஆணவந்தைச் சிறிது நீக்கி உயிரின் செயலாற்றலை எழுப்பும்; வித்தை உயிரின் அறிவாற்றலை எழுப்பும்; அராகம் விழைவாற்றலை எழுப்பும். உயிர் இவ்வைந்தனோடும் கூடிய நின்று ஐம்புலன்களையும் நுசரும் காலத்துப் புருடன் எனப்பெயர் பெறும்; மாயை நிலையில்பொருள்களை நிலையெனக் கருதச் செய்து மயக்கும். இதனை அறிவாயாக! 19

சுத்த தத்துவம்

வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்;
சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள்—நித்தமாம்
சுத்தவித்தை ஈசுரம்பின் சொல்லும் சதாசிவம்நல்
சத்திசிவம் காண்அவைகள் தாம்.

பொ-ரை: யாம் இதுவரை வித்தியா தத்துவங்கள் ஏழையும் விளக்கிச் சொன்னோம். இனி சுத்த தத்துவங்களைச் சொல்லக் கேட்பாயாக! அவை என்றும் நிலைபெற்று நிற்கின்ற சுத்த வித்தையும், ஈசுரமும், அவற்றின் மேலாகச் சொல்லப்பெறும் சதாசிவமும், நல்ல சக்தியும், சிவமும் என அறிவாயாக!

வி-ரை: தான்-அசைநிலை. இத்தத்துவங்கள் சிவதத்துவங்கள் எனப்பெறும். உயிர்களுக்கு அறிவு இச்சை செயல் என்பன

Koviloor Digital Library

இயல்பில் அமைந்தவை; எனினும் அவை ஆணவ மலத்தால் தடைப் படுகின்றன அத்தடையை நீக்கி இறையருள் துணைசெய்ய நிற்பதற்கு நிலைக்களமாக விளங்குவது சுத்த மாயையாகும் அங்ஙனம் இறையருள் துணைசெய்ய நிற்கும் நிலையில் அதுவும் அறிவு இச்சை செயல் என மூவகைப்பட நின்று தொழிற் படுத்தும். அவற்றுள் இச்சை எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாகவே விளங்கும்; அறிவும் செயலும் தனித்தும் இணைந்தும் ஒன்றுமிக ஒன்று குறைந்தும் நின்று தொழிற்படுத்தும். இவ்வேறுபாட்டிற்கேற்பச் சுத்த மாயையில் விளையும் நிலைகள் ஐந்து வகைப்படும். அவையே சுத்ததத்துவம் அல்லது சிவதத்துவம் எனக் கூறப்பெறும் 20

அவற்றின் நிலை

சுத்தவித்தை ஞானமிகும் தொன்மையாம் ஈசுரந்தான்
அத்தன் தொழிலதிகம் ஆக்கியிடும் ஒத்தல்இலை
சாதாக் கியம்என்றும் சத்தி சிவம்கிரியை
ஆதார ஞானஉரு ஆம்.

பொ-ரை: சுத்த வித்தை அறிவு மிகச் செயல்குறைய நிகழும் பழமையதாகிய ஈசுரம் தொழில் மிக அறிவு அடங்கி நிகழும்; சதாக்கியம் அறிவும் செயலும் ஒப்ப நிகழும்; தொழிலுக்கு நிலைக்களமாக விளங்குவது சத்தியாம்; அறிவுக்கு நிலைக்களமாக விளங்குவது சிவமாம்.

வி-ரை; சத்தி கிரியை ஆதார உருவாம்; சிவம் ஞான ஆதார உருவாம் எனக்கூட்டுக. சத்தியை விந்து எனவும்: சிவத்தைநாதம் எனவும் வழங்குப. 21

ஆணவமும் கன்மமும்

ஆறாறு தத்துவமும் சொன்னோம் அடைவாக
மாறா மலமிரண்டும் வாசொல்லக்—கூறில்
அறியாமை யாணவம்நீ யானசுக துக்கம்
குறியா வினையென்று கொள்.

பொ-ரை; இதுகாறும் முப்பத்தாறு தத்துவங்களையும் முறையாக எடுத்துரைத்தோம் இனி உயிரை விட்டு நீங்காத ஆணவம் கன்மம் ஆகிய இரு மலங்களின் இயல்பையும் யாம் சொல்லக் கேட்பாயாக. அவற்றை எடுத்துக் கூறின் உன்னில் பிரித்தறிய முடியாதவாறு பிணித்து நிற்கும் இன்ப துன்பங்களே கன்மமாகும். இதனை அறிவாயாக!

Koviloor Digital Library

வி-ரை; நீயான-உன்னிடத்திலிருந்து பிரித்தறிய இயலதாவாறு இருக்கும். இதனை அறியாமை, சுகதுக்கம் ஆகிய ஈரிடத்தும் கூட்டுக. குறியா-அடையாளமாக. அறியாமை ஆணவத்தின் அடையாளம். சுக துக்கம் கன்மத்தின் அடையாயம். உயிரின் அறிவை விளங்க ஒட்டாது மறைத்து அறியாமையைத் தந்து நிற்பது ஆணவமாகும். இன்ப துன்ப நுகர்ச்சிகளை விளைவித்து வரும் இருவினைகளும் கன்மமாகும். 22

மாணவன் தன்னைத் தானறிய வேண்டல்

ஆருறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
மாரு அருளால் வகுத்துரைத்தீர்— வேருகா
என்னையெனக்கறியக் காட்டீர் இவைகண்டேன்
உன்னரிய தேசிகரே உற்று.

பொ-ரை: நினைத்தற்கரிய குருமூர்த்தியே! அடியேனை விட்டு எஞ்ஞான்றும் நீங்காது நிற்கும் உமது திருவருளால் முப்பத்தாறு தத்துவங்களையும் ஆணவ கன்மங்களின் இயல்பையும் வகைப்படுத்தி விளக்கியருளினீர். அடியேனும் உம் திருவருள் பெற்று இவற்றை விளக்கமாகத் தெரிந்து கொண்டேன். இனி அம்மும் மலங்களினின்றும் வேறு பிரித்தறிய வாராது ஒன்ருய்க் கிடந்துழலும் அடியவனின் (உயிரின்) இயல்பை எனக்கு விளங்குமாறு உணர்த்தி அருள்வீராக!

வி-ரை: வேருக என்பதும் பாடம். இதற்கு அம்மலங்களினின்றும் வேருக நிற்கும் எனக்கு எனப்பொருள் காண்க. 23

உயிரின் இயல்பு

நன்ரு உரைக்கக்கேள் நல்லசித்தின் முன்அசித்தங்(கு)
ஒன்ருது சித்து அசித்தை ஓராது —நின்றுஇவற்றை
அன்றே பகுத்தறிவ(து) ஆன்மாவே என்றுமறை
குன்ருமல் ஓதும் குறித்து.

பொ-ரை: நன்மாணுக்கனே! உன்தியல்பை (உயிரின் இயல்பை) நன்ருக விளக்குகின்ருேம். கேட்பாயாக! இயல்பாகவே எல்லாவற்றையும் முற்றும் உணர்ந்த சிவத்தின் முன் அறிவற்ற பொருள்கள் விளங்கித் தோன்றமாட்டா. அச்சிவ பரம்பொருளும் அத்தகைய அறிவில் பொருள்களை ஒன்று ஒன்ருகப் பகுத்தறியாது. எனவே இவ் வறிவில்பொருள்களோடு பொருந்தி அறியாமையைப்

Koviloor Digital Library
பெற்றும், திருவருளோடு பொருந்தி நின்று அறிவைப் பெற்றும் நிற்பது உயிராம் எனச் சிவாகமங்கள் விளக்கிக் கூறும்.

வி-ரை: உலகும் உடல் முதலிய கருவிகளும் அறிவற்றன ஆதலின் இவை கதிரவன்முன் விளக்கொளிபோல விளங்கித் தோன்ற- கதிரவன் போன்ற சிவபரம்பொருளும் அவ்வுலகையும் உடல் முதலிய கருவிகளையும் முழுமையாக அறிவதன்றி ஒவ்வொன்ருகச் சுட்டி அறியவேண்டுவதன்று. எனவே உயிரொன்றே விளக்குப் போன்ற உடல் முதலிய கருவி கரணங்களோடு கூடி உலகில் வாழும்போது சிற்றறிவு உடையதாயும், இக்கட்டினின்றும் நீங்கிச் சிவ பரம்பொருளைச் சார்ந்தபொழுது முற்றறிவுடைதாயும் விளங்கி நிற்கும். எனவே உயிர் சார்ந்ததன் வண்ணமாயது என்பது கருத்து. 24

தத்துவங்களின் இயல்பு

தத்துவங்கள் ஆருறும் தம்மைத்தாம் என்றறியா
எத்தன்மை என்னில் இயம்பக்கேள்—சுத்தமாம்
ஆறு சுவையும் அறியாவே தம்மைத்தாம்
கூறில் அவையினவபோல் கொள்.

பொ-ரை: முப்பத்தாறு தத்துவங்களும் தம்மைத்தாம் அறிய மாட்டா. அவ்வாறு அறிய மாட்டாதது எதுபோலுமெனின் யாம் கூறக் கேட்பாயாக. தூய்மையான ஆறுசுவைகளும் தம்மைத் தாம் அறியமாட்டாவாம். சொல்லப்புகின் அத்தத்துவங்களும் இவைபோல் வனவாம் எனக்கருதுவாயாக.

வி-ரை: அறுசுவையாவன: இனிப்பு, கைப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்பு என்பன. இவையான் இனிப்பு, யான் புளிப்பு எனத் தன்னைத்தான் உணர்வதில்லை. இங்ஙனமே தத்து வங்களும் யான் இன்ன தத்துவம் எனத் தம்மைத்தாம் அறிவதில்லை எனவே இவை அறிவற்றன என்பதாகும். 25

தத்துவங்களை அறிதற்குரியது உயிர்

ஆறு சுவையும் அருந்தி அவைதம்மை
வேறுஒருவன் கூறியிடும் மேன்மைபோல் - ஆருறும்
ஒன்றுஒன்ருு நாடியுணர்ந் தோதில்அதில் உற்றறிவாய்
நின்றபொருள் தானேகாண் நீ.

பொ-ரை: ஆறு சுவைகளையும் அவற்றிற்கு வேருக நிற்கும் மனிதன் ஒருவன் சுவைத்து அவற்றை இஃது இனிப்பு உடையது

Koviloor Digital Library

இஃது உவர்ப்புடையது என அறிந்துகூறும் 'தன்மையைப் போல' சொல்லப்புகின். இம்முப்பத்தாறு தத்துவங்களோடும் பொருந்தி அவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ந்து இது இப்படிப்பட்டது என உணர்ந்து அறிவாய் நிலைபெற்று நிற்கும் நீயே (உயிர்) அவற்றை யறிதற்குரிய உரிமை உடையது என அறிவாயாக.

வி-ரை: தான், ஏ என்பன-அசை நிலைகள். அறுசுவை அறிவற்றன அவற்றை நுகரும் மனிதன் அறிவுடையவன். அதைப்போன்றே தத்துவங்கள் அறிவற்றன. அவற்றோடு பொருந்தி அவற்றைப் பகுத்தறியும் உயிர் அறிவுடையது. ஓதில் ஆறும் உற்று அதில் ஒன்று ஒன்று நாடி உணர்ந்து அறிவாய் நின்ற பொருள் தானே நீ தான் எனக்கூட்டுக. 26

இறை இயல்பு(வேறுதல்)

குன்று அருளாலே கூறினீர் என்வடிவு
பொன்றாத நும்முருவம் போதியீர் – நின்றஅருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே உனதறிவின்
நண்ணிஅறி வித்திடுவோம் நாம்.

பொ-ரை: குருமூர்த்தியே! உமது குறைவில்லாத அருளால் என் இயல்பை (உயிர் இயல்பை) அடியேனுக்கு விளக்கியருளினீர் இனி என்றும் அழியாத உம் இயல்பை உணர்த்தி அருள்வீராக என மாணாக்கன் வேண்ட, குருமூர்த்திகள் பின்வருமாறு கூறுகின்றார் கதிரவன் கண்ணுக்கு வேறாய் நின்றும் கண்ணொளியோடு கூடிப் பிறபொருளைக் காட்டி வருவது போல, யாமும் உனக்கு வேறாய் நின்றும் உன் அறிவில் பொருந்தி அனைத்தையும் அறிவித்து வருகின்றோம். 27

வி-ரை: ஏகாரம் இரண்டும் அசை நிலைகள்.

இறை இயல்பு (ஒன்றுதல்)

அன்றியுங்கேள் ஆன்மாவால் ஆய்ந்தறியும் ஐம்பொறிகள்
இன்றி அறியா இவையென்ன - நின்றதுபோல்
ஓவாமல் உன்னை உணர்த்துவோம் உன்னறிவில்
மேவாமல் மேவிநா மே.

பொ-ரை: மாணாக்கனே! மேலும் கேட்பாயாக. மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளும் உயிரின் துணைகொண்டே. சுவை முதலிய புலன்களை அறிகின்றன. உயிர் உதவியின்றேல் இவை அறிய வல்லன அல்ல. இதைப்போன்றே உன்னறிவில் நாம்

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 12805

Koviloor Digital Library

பொருந்தாமல் பொருந்தி இடைவிடாது நின்று உன்னறிவை விளக்கிவருகின்றோம்.

வி-ரை; ஏ-அசைநிலை. பொருந்தாமல் பொருந்துதலாவது இறைவன் உயிரின் அறிவில் பிரிப்பின்றிக் கலந்திருந்தும் அவ்வுயிர் தன்னைக் காணமாட்டாமல் கரந்துறையும் நிலையை விளக்குவதாகும்.

இறையியல்பு (உடனுதல்)

அக்கரங்கட் கெல்லாம் அகரவுயிர் நின்றாற்போல்
மிக்க உயிர்க்குயிராய் மேவினோம்—எக்கண்ணும்
நில்லா இடத்துஉயிர்க்கு நில்லாது அறிவென்று
நல்ஆ கமம்ஓதும் நாடு.

பொ-ரை; எல்லா எழுத்துக்களிலும் அகரமாகிய உயிரெழுத்துப் பொருந்தி நின்று அவற்றை இயக்கி நிற்றல் போல எண்ணற்ற உயிர்களிடத்தில் யாமும் இயைந்து அவற்றை இயக்கும் உயிராய்ப பொருந்தியுள்ளோம். இவ்வாறு அவற்றின் உள்ளும் புறமுமாக யாம் கலந்து நிற்கவில்லையாயின் அவ்வுயிர்களிடத்து அறிவு நிகழாது எனச் சிவாகமங்கள் எடுத்துரைக்கும். இதை நீ அறிவாயாக!

வி-ரை; அகரம் மற்றைய உயிரெழுத்து மெய்யெழுத்துக்கள் எல்லாவற்றிலும் ஒருங்கியைந்து அவற்றை இயக்குகிறது. ஆதலின் அதுவே தலையாது. அதுபோல் சிவபரம்பொருளும் எல்லா உயிர்களிடத்திலும் ஒருங்கியைந்து அவற்றை இயக்கி வருகிறது. ஆதலின் அப்பரம்பொருளே தலையாய பொருளாம். 'அகர முதல எழுத்தெல்லாம், 'அகர முதலானை, 'அகர உயிர்போல், எனவரும் திருவாக்குகளும் காண்க. 29

மாணவன் நாதன் நடம் பற்றி வேண்டல்

நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத்து அஞ்செழுத்தால்
உற்றுஉருவாய் நின்றுஆடல் உள்ளபடி பெற்றிடநான்
விண்ணார் பொழில்வெண்ணெய் மெய்கண்ட நாதனே
தண்ணார் அருளாலே சாற்று.

பொ-ரை; வானளாவிய சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் மெய்கண்ட தேவே! நல்ல தவம் செய்தவர் கண்டு மகிழுமாறு நாதத்தின் முடிவில் நின்று திருவைந்

Koviloor Digital Library

தெழுத்தால் ஆகிய உருக்கொண்ட திருவுருவினை உடையராய் நின்று கூத்தப்பெருமான் செய்தருளும் திருக்கூத்தினை அடியேன் உள்ளவாறு அறிந்து வழிபடும் வகையைத் தண்ணளி நிறைந்த நும் பேரருளால் கூறியருள்வீராக!

வி-ரை: தான், ஏ என்பன அசைநிலைகள். நாதாந்தம் நிலம் முதல் நாதம் ஈருகிய தத்துவம் கடந்த எல்லை. அது பரவெளி எனப்படும். 30

நடம் செய்யும் இடமும் நோக்கமும்

எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் சிட்டன்
சிவாயநம என்னும் திருவெழுத்து அஞ்சாலே
அவாயமற நின்றுடுவான்.

பொ-ரை; நன்மாணுக்கனே! ய என்னும் எழுத்தால் குறிக்கப் பெறும் உயிரினிடத்து இறைவன் செய்யும் திருக்கூத்தினை யாம் சொல்லக் கேட்பாயாக! சிவபெருமான் முத்திப் பேற்றினை அருள வல்ல சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தால் திருமேனிகொண்டு உயிர்களுக்குப் பிறவித்துன்பம் நீங்குமாறு அவ்விடத்தில் நின்று ஆடல் புரிகின்ருன்.

வி-ரை: ஏகாரம் இரண்டும் அசைநிலைகள். எட்டும் இரண்டும் சேரப் பத்தாகும். இவ்வெண்ணினைத் தமிழில் ய எனக்குறிப்பார். திருவைந்தெழுத்தில் உள்ள யகரம் உயிரைக் குறிக்கும். எனவே எட்டும் இரண்டும் உருவான இலிங்கம் என்பது உயிராகும். இவ்வுயிரே இறைவன் கூத்து நிகழ்த்துதற்குரிய அரங்காகும். 'எட்டினேடு இரண்டும் அறியேனையே, என்னும் திருவாக்கு ஈண்டு நினைவு கூர்தற்குரியது அவாயம்-துன்பம்: ஈண்டுப் பிறவித்துன்பத்தின் மேற்று. 31

கூத்தப்பெருமானின் திருமேனி

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரும்முகம் வாமுடியப் பார்.

பொ-ரை: நன்மாணுக்கனே! அழகிய திருச்சிற்றம்பலமுடையான் திருக்கூத்தியற்றும் நிலையைக் கேட்பாயாக. விரும்பத்தக்க

Koviloor Digital Library

திருவடி நகரமாகும்; திருவயிறு பொருந்திய மகாரமாகும், உயர்ந்த திருத்தோள் சிகாரமாகும்; சிவாகமங்களை அருளிய திருமுகம் வகாரமாகும்; திருமுடி யகாரமாகும்.

வி-ரை; ஏ- அசைநிலை. இவ்வாறு நகரம் முதலாக வைத்து எண்ணப்படும் திருவைந்தெழுத்து அப்பெருமானுக்குத் திருமேனி யாக உள்ளது. 32

இதுவுமது

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனர்
தங்கும் மரகமது தான்.

பொ-ரை: ஆராய்ந்து பார்க்கின் கூத்தப் பெருமானுக்குத் துடியையுடைய திருக்கரம் சிகாரமாகும்; நன்ருக வீசிய திருக்கரம் ஞான உருவாகிய வகாரமாகும். யாரையும் அஞ்சல் எனக்காட்டும் திருக்கரம் ஒளி பெற்ற யகாரமாகும்; நெருப்பேந்திய திருக்கரம் நகாரமாகும்; முயலகன் பொருந்தியிருக்கின்ற திருவடி மகாரமாக அமையும்.

வி-ரை: அது - பகுதிப்பொருள் விகுதி. தான் - அசைநிலை முன்பாடலில் நகர முதலாகக் கூறப்பெற்ற திருவைந்தெழுத்துத் தூல பஞ்சாட்சரம் என்றும், இப்பர்டலில் சிகரம் முதலாகக் கூறிய திருவைந்தெழுத்துச் சூக்கும பஞ்சாட்சரம் என்றும் கூறப்பெறும். இவ்விரு வகையான திருவைந்தெழுத்துக்களுமே கூத்தப்பெரு மானின் திருமேனியாக விளங்குவதன் கருத்து அப்பெருமான் உயிர்களுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்து அடையாத வாறு காத்தருளும் குறிப்புப் பற்றியாம். இத்திருபாடல் 31 - வது பாடலை அடுத்து இருக்கலாமோ என்பது அறிஞர்கள் ஆராயத் தக்கது. 33

திருவாசியும் ஒளியும்

ஓங்கார மேநல் திருவாசி உற்று அதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் ஆங்காரம்
அற்ருர் அறிவர் அணி அம்பலத்தான் ஆடல் இது
பெற்ருர் பிறப்பற்ருர் பின்.

பொ-ரை: பிரணவமே நல்ல திருவாசியாகும். அதில் பொருந்தி எஞ்ஞான்றும் நீங்காது விளங்கும் திருவைந்தெழுத்தே சிவ பரம்

Koviloor Digital Library

பொருளாகும். இதனை யான் எனது என்னும் செருக்கு அறப் பெற்றவர்களே நன்கு அறிவர். அழகிய திருச்சிறறம்பலமுடையானின் திருக்கூத்தினை வழிபடப்பெற்றவரே இனிப் பிறவா நெறி பெறுவர்.

வி-ரை "யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்பது காண்க. 34

ஊன நடனம்

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

பொ-ரை: உடுக்கேந்திய திருக்கரத்தால் படைத்தலையும். அமைந்த திருக்கரத்தால் உயிர்கள் நுகர்தலைச் செய்தற்குக் காரணமாய காத்தலையும், புகழ்பெற்ற நெருப்பேந்திய திருக்கரத்தால் அழித்தலையும், அழுத்தமாக ஊன்றியிருக்கும் தாமரை மலரனைய திருவடியால் பொருந்திய மறைப்பையும், எடுத்த தாமரையனைய திருவடியால் அருளலையும் அப்பெருமான் மேற்கொண்டிருப்பதை அறிவாயாக!

வி-ரை: பொதுவாக இறைவன் உலகின்மேல் வைத்துப் படைத்தல், காத்தல், அழித்தல், ஆகிய தொழில்களையும், உயிரின் மேல் வைத்து, மறைத்தல், அருளல், ஆகிய தொழில்களையும் செய்தலைத் தூல ஐந்தொழில் என்பர். இனி இறைவன் உலகை ஒடுக்கிய பின்மீண்டும் அதனைத் தோற்றுவித்தற்காக ஐந்தொழில் இயற்றுதலையும், உயிர்கள் உறங்கும் நிலையில் இவ்வைந்தொழில் இயற்று தலையும் சூக்கும ஐந்தொழில் என்பர். இனி அவ்வுயிர் விழிப்பு நிலையில் தத்துவங்களோடு கூடி நின்று உலகியல் இன்பங்களை நுகர்தற் பொருட்டு இயற்றும் ஐந்தொழிலை அதிசூக்கும ஐந்தொழில் என்பர். இம்மூன்றும் உயிர் வினைப்பயனை ஈட்டவும் நுகரவும் காரணமாயிருத்தலின் ஊன நடனம் என்பர். இதனையே இப்பாடற்கண் விளக்குகின்றார் ஆசிரியர். 35

ஞான நடனம்

மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தான்எடுத்து—நேயத்தால்
ஆநந்த வாரியதில் ஆன்மாவைத் தான்அழுத்தல்
தான்எந்தை யார்பரதம் தான்.

Koviloor Digital Library

பொ-ரை: துடியை முழக்குவதன் மூலம் உயிரிடத்துள்ள மாயையை நீங்கச் செய்தும், நெருப்பேந்திய திருக்கை மூலம் அவ்வுரியின் வலிய கன்ம மலத்தைச் சுடுவித்தும், முயலகன் மீது ஊன்றிய திருவடியின் மூலம் ஆணவ மலத்தின் வலி கெடும்படிச் செய்தும், தூக்கிய திருவடியின் மூலம் அருளை வழங்கியும் இவ்வாறு தன் திருக்கருணையினால் உயிரைத்தம் திருவருளோடு இயைவித்துப் பேரின்பப் பெருவாழ்வில் திளைக்கச் செய்வதே எமது தந்தையாராகிய கூத்தப்பெருமானின் திருக்கூத்தின் உண்மையாகும்.

வி-ரை மேற்கூறிய ஊன நடனத்தால் உயிர், இருவினையொப்பும்மலபரிபாகமும் பெற்றுப் பக்குவமுற்ற நிலையில் அதனைப் பேரின்பப் பெருவாழ்வில் தலைப்படுத்தற்காகச் செய்யும் ஐந்தொழிலையே இப்பாடல் கூறுகின்றது. இதுவே ஞான நடனம் என்பர். தான் என வருவன அசைநிலைகள். வரதம் எனப் பாடம் கொண்டு தன் அமைந்த திருக்கரத்தின்மூலம் அவ்வுயிர்களைப் பேரின்பப் பெருவாழ்வில் ஆழ்த்தித் திளைக்கச்செய்தவன் எனப் பொருள் காண்டல் தக்கது என்பது திருத் தருமைஆதீனத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் திருவுளப் பாங்காகும். இவ்வருட்கொடை அவர்கள் தம் திரு முன்பு வழங்கப் பெற்றதாகும். 36

ஆனந்த நடனம்

மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்
தான்அந்த மானிடத்தே தங்கியிடும்—ஆனந்தம்
மொண்டருந்த நின்றுடல் காணும்அருள் மூர்த்தியாக்
கொண்டதிரு அம்பலத்தான் கூத்து.

பொ-ரை: உரையையும் உணர்வையும் அற்று நிற்கும் ஞானியர் தம் மும்மலங்களின் வாசனையை முழுமையாக நீக்கி ஆணவம் முழுதும் அற்ற நிலையில் கிடைக்கின்ற பேரின்பத்தைத் துய்த்து இன்புறுதற்பொருட்டு உமையம்மையே தம் ஆடலைக்கண்டு வழிபடுமாறு செய்தருளும் கூத்தப்பெருமானின் திருக்கூத்தாகும் இது.

வி-ரை: மேற்கூறிய ஞான நடனத்தின் பயனாக உயிரை இறைவன் தன்னையே கண்டு இன்புறுமாறு அவ்வுயிரின் அறிவு, இச்சை, செயல்களைத் தன் வழிப்படுத்தச் செய்வதே இந்நடனம் ஆகும். இதனை ஆனந்த நடனம் என்பர் திரு. க. வச்சிரவேல் முதலியார். மோனம் —மௌனம்: அஃதாவது உரையற்ற நிலை. அதன்

Koviloor Digital Library

முடிவில் நிற்றலாது உரையும் உணர்வும் அற்ற நிலையாகும் தான்—யான் என்னும செருக்கு. அந்தமான இடம்—முடிவான இடம்; செருக்கற்றஇடம் அந்தமான இடம் என்பது அந்தமானிடம் என நின்றது. அருள்—உமை; சிவகாமசுந்தரி. 37

வழிபட்டார் பெறும்பேறு

பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக்கு எட்டா ஒருவன் — வரைமகள்தான்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணும அவர்க்கு உண்டோ பிறப்பு.

பொ-ரை: மாற்றம் மனங்கழிய நின்ற ஒப்பற்ற சிவபெருமான் அருளையே அரங்காகக் கொண்டு இடப்பக்கத்திலுள்ள உமையும் கண்டு வழிபடுமாறு மாண்பு மிக்க திருவைந்தெழுத்தால் திருமேனி கொண்டு ஆடி அருளுவதை விரும்பி வழிபடுவோர்க்கு மீண்டும் பிறப்புண்டோ? இல்லை.

வி-ரை: தான், ஏ என்பன அசைநிலைகள். பரை-அருள். இறைவனின் அரங்கும் அருள்; அவன் எடுக்கும் திருமேனிகளும் அருள். உயிர்களின் பொருட்டுச் சேயுண்மருந்து தாயுண்டாங்கு அவ்வாடலைக்கண்டு வழிபடுவதும் அருள். ஆகவே அனைத்தும் அவனது திருவருளே ஆகும். தில்லைக் கூத்தனை வழிபடின் கள்ளபுலக் குரம்பைக் கட்டழியும்; அதனுல் மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராது பேரின்பப் பெருவாழ்வை அடையலாம் என்பது கருத்து. 38

திருவைந்தெழுத்தின் உண்மையை அருள வேண்டல்

நாதாந்த நாடகத்தை நன்ரு அருள்செய்தீர்
ஓதீர் எழுத்துஅஞ்சும் உள்ளபடி—தீதுஅறவே
அஞ்செழுத்து ஈதாகில் அழியும்எழுத் தாய்விடுமோ
தஞ்ச அருள்குருவே சாற்று.

பொ-ரை: அடியேனுக்குப் புகலிடமாக உள்ள அருட் குருவே! நாத முடிவில் இயற்றப்பெறும் அற்புதக் கூத்தைத் தெளிவாக விளங்குமாறு செய்தருளினீர். இனித் திருவைந்தெழுத்தையும் உள்ள வரறு விளக்கி அருள்வீராக; உயிர்களின் மாட்டுள்ள மலத்தைக் கெடுத்தற்குக் கருவியாய இத்திருவைந்தெழுத்தும் என்றேனும் அழியும் இயல்புடைய எழுத்தாகிவிடுமோ? இதனைக் கூறியருள் வீராக!

Koviloor Digital Library

வி-ரை: ஏகாரம் அசை நிலை.

திருவைந்தெழுத்தின் அழியாத்தன்மையை அருளல்

உற்ற குறியழியும் ஓதுங்கால் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது—மற்றதுகேள்
சிவன் அருள் ஆவி எழிலார் திரோதமலம்
ஆசில்எழுத்து அஞ்சின் அடை வாம்.

பொ-ரை: மொழியின் இயல்பை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது அது சொல்லும் பொருளுமென இருவகைப்படும். மொழிகளிலுள்ள சொல்லும் பொருளும் அழியும் இயல்பினவே. ஆனால் திருவைந்தெழுத்தோ அழியாத் தன்மையது. காரணம் அவை அவ்வெழுத்துக்களின் பொருளாக உள்ள அழகு பொருந்திய சிவபெருமானும், அப்பெருமானது திருவருளும், உயிரும், மறைத்தற் சத்தியும் ஆணவமலமும் ஆம். ஆதலின் அவை அழியா.

வி-ரை: தான், மற்று என்பன அசை நிலைகள். மொழி சொல்லும் பொருளும் என இருவகைப்படும். சொல் பொருளைக் குறித்து வருவது; பொருள் சொல்லால் குறிக்கப்பெறுவது. பொருள் அழியுமாயின் அச்சொல்லும் அழியும். சொல் அழியுமாயின் அதன் உறுப்பாகிய எழுத்துக்களும் அழியும். ஐந்தெழுத்தின் பொருளாக உள்ள இவ்வைம் பொருள்களோ என்றும் அழியா இயல்பின ஆதலின் அவற்றைக் குறிக்கும் திருவைந்தெழுத்தும் அழியா இயல்பினவாம். திருவைந்தெழுத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு சொல்லாகும். ஆதலின் அஞ்சுபதம் என்பர். 'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி' என்பர் சுந்தரர். அட்சரம் என்ற சொல் அழியாதது எனப் பொருள்படும் இந்நிலையில் திருவைந்தெழுத்து இப்பொருளுக்கு ஏற்றதாய் உள்ளது. 40

திருவைந்தெழுத்தின் பொருளும் அதனை ஓதும் முறையும்

சிவன்அருள் ஆவி திரோதம் மலம்ஐந்தும்
அவன்எழுத்து அஞ்சின் அடைவாம் இவன்இன்று
நம்முதலா ஓதில்அருள் நாடாது நாடும்அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று.

பொ-ரை: மேற்கூறிய திருவைந்தெழுத்துக்களில் சிகாரம் சிவபெருமானையும், வகரம் அருளையும், யகரம் உயிரையும், நகரம் மறைப்பையும், மகரம் ஆணவத்தையும் குறிக்கும். இருவகையாக

Koviloor Digital Library

ஓதப்பெறும் திருவைந்தெழுத்தில் நகரமுதலாக வைத்து ஓதின் திருவருள் வெளிப்படுதலில்லை. ஆதலின் நீ குருவருள் வழிநின்று சிகரம் முதலாக வைத்து ஓதின் திருவருள் கைகூடும்.

வி-ரை: நமசிவாய எனஓதாது சிவாயநம என ஓதுதல் தக்கது. 41

அண்ணல் முதலா அழகார் எழுத்துஐந்தும்
எண்ணில் இராப்பகல்அற்ற இன்பத்தே—நண்ணி
அருளா னதுசிவத்தே ஆக்கும் அணுவை
இருளா னதுதீர இன்று.

பொ-ரை: அழகு பொருந்திய திருவெழுத்து ஐந்தையும் சிகாரம் முதலாக வைத்து எண்ணிவரின் அங்ஙனம் எண்ணிய உயிரினை அப்பொழுது திருவருள் வெளிப்பட்டு ஆணவமலம் நீங்குமாறு கேவல சகலம் நீங்கிய சுத்த நிலைக்கண்ணே சிவானந்தத்தில் திளைக்கச்செய்யும்.

வி-ரை: ஏகாரம் இரண்டும் அசைநிலைகள் அழகார் எழுத்து ஐந்தும் அண்ணல் முதலா எண்ணில் (அங்ஙனம் எண்ணிய) அணுவை இன்று அருளானது நண்ணி இருளானது தீர இராப்பகல் அற்ற இன்பத்தே சிவத்தையாக்கும் எனக்கூட்டுக. அண்ணல் - சிவபெருமான். அப்பரம்பொருளைக் குறிக்கும் எழுத்து சிகரம். சிகரம் முதலாக வைத்து ஓதுவதையே 'அண்ணல் முதலா' என்றார். ஆணவக்கருவறையில் அறிவின்றி நுகர்வின்றிக் கண்ணிலாக் குழவியைப் போல் இருத்தல் கேவல நிலையாம். உணர்த்த உணரும் அறிவும் அதற்குரிய கருவிகளும் பெற்று வாழ்தல் சகலமாகும். இக்கருவி கரணங்கள் நீங்கி இறையருளில் திளைத்து நிற்பது சுத்த நிலையாகும். இங்கு இரவு பகல் என்பன கேவல சகல நிலைகளைக் குறித்தன. அணு - உயிர். 42

ஓதும் முறையை வற்புறுத்தியருளல்

ஆதிமலம் இரண்டும் ஆதியா ஓதினல்
சேதியா மும்மலமும் தீர்வாகா—போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படிஒ(து அஞ்செழுத்து மே.

பொ-ரை: ஆதிசத்தி எனப்படும் மறைப்புச் சத்தியைக் குறிக்கும் நகாரத்தையும், மலத்தைக் குறிக்கும் மகாரத்தையும், முன்னாக

Koviloor Digital Library

வைத்து ஓதினுல் மும்மலங்களையும் எளிதில் களைந்தெறிய இயலாது. அவ்வாறு ஓதுதல் உற்ற துன்பங்களை நீக்குதற்கும் கருவியாகா. ஆதலின் அத்திருவைந்தெழுத்தைச் சிகரம் முதலாக மாற்றி முறைப்படி எண்ணுவாயாக எண்ணின் உயிர் தன்னுணர்வால் நுகர்தற்கரிய பேரின்பத்தில் திளைத்து வாழலாம்.

வி-ரை: ஏகாரம் இரண்டும் அசை நிலைகள். மேல் உடன் பாட்டில் வைத்துக் கூறியவர் ஈண்டு எதிர்மறையிலும் வைத்துக் கூறியது சிகரம் முதலாக வைத்து ஓதி உயிர்கள் வீடு அடைதல் வேண்டும் என்னும் கருணை பற்றியாம். போதம்-தன்னுணர்வு. 43

திருவைந்தெழுத்தின் பெருமை

அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும்-அஞ்செழுத்தே
ஆனந்த தாண்டவமும் ஆருறுக்(கு) அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்.

பொ-ரை: சிவபெருமானுல் அருளிச் செய்யப்பெற்ற ஆகமங்களும் அரிய வேதங்களும் இத் திருவைந்தெழுத்தின் விளக்கமே ஆகும். அப்பெருமானுல் அருளிச் செய்யப்பெற்ற தலையாய புராணங்கள் அனைத்தும் இத்திருவைந்தெழுத்தின் விளக்கமே ஆகும். ஞானியர்களையும் உய்வித்தருளும் இறைவனின் திருக்கூத்தும், எல்லாத் தத்துவங்கட்கும் மேலாக விளங்கும் உரையுணர்வுக் கெட்டா இன்பமும், வீடுபேறும் இத்திருவைந்தெழுத்தின் பயனே ஆகும்.

வி-ரை: வேதம் ஆகமம் புராணம் ஆகிய அனைத்திலும் மெய்ப் பொருளாகக் கூறப்படுவன இத்திருவைந்தெழுத்தே ஆகும். 44

முத்திநிலையில் உயிர் இறையோடு கூடி வாழுமாறு

முத்திதனையடைந்தோர் முந்துபழம் போதுஅங்கி
வித்தகமாம் வீணை இவையிற்றின்—ஒத்த
இரதம்மணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர்என்று ஓதும் விதி.

பொ-ரை: முத்திநிலையில் அப்பேற்றிற்குரியோர் பழத்தில் சுவையும் மலரில் மணமும், நெருப்பில் சூடும், வீணையில் இன்னிசையும் அவ்வப்பொருளில் அடங்கிப் பிரிப்பின்றிக் கலந்து நிற்றல் போலச் சிவபரம் பொருளோடு தாம் பிரிப்பின்றி இயைந்து இன்புற்றிருப்பர் எனச்சிவாகமங்கள் சொல்லும்.

Koviloor Digital Library

வி-ரை: விதி - சிவகாமங்கள். முந்து பழம் - முதிர்ந்தபழம், வித்தகம் என்பது ஓசையின் இனிமை உணர நின்றது. இரதம் - சுவை. பழம் இரதம், போது மணம், அங்கி வெம்மை, வீணை, நாதம் என நிரனியைப் படுத்துக. 45

இதுவுமது

தத்துவங்கள் எல்லாம் சகசமாய் ஆன்மாவில்
பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல்-முத்திதனில்
சித்தமலம் அற்ருர் செறிந்திடுவர் என்றுமறை
சத்தியமாய் ஓதியிடுந் தான்.

பொ-ரை: உயிர்கள் பிறப்பு நிலையில் தமக்குக் கருவியாய் இருந்த தத்துவங்கள் எல்லாவற்றையும் தாம் வேறு ஆவை வேறு எனப் பிரித்தறிய இயலாதவாறு அவ்வுயிர்களேயாய் நின்றுற் போல, மலம் நீங்கிய வீட்டு நிலையில் அப்பேற்றிற்குரிய உயிர்கள் சிவத்தோடு ஒன்றி சிவம் வேறு தாம் வேறு என்று பிரித்தறிய இயலாதவாறு ஒன்றுபட்டு அச்சிவமேயாய் நிற்கும் எனச் சிவாகமங்கள் உறுதியாகச் சொல்லும்.

வி-ரை: முன்னைய பாடலில் சிவத்தோடு வீடு பேற்றிற்குரிய உயிர்கள் கலந்து நிற்குமாற்றிற்கு நான்கு உவமைகள் கூறப் பெற்றன. அவை பழம், பூ, நெருப்பு, வீணை என்பன அவற்றினிடமாகத் தோன்றிய சுவை, மணம், வெம்மை, இன்னோசை என்பன அவற்றின் குணமாகும் எனவே இவை குணமும் குணியுமாம். இவை கொண்டு இறைவனும் வீடு பேற்றிற்குரிய உயிர்களும் குணமும் குணியுமாவன எனக்கருதி விடலாகாது. அவை கலப்பளவிற்கேயாம் என்பது உணர இப்பாடல் கூறப்பெற்றது. குணி - குணத்தை யுடையது. 46

இதுவுமது

ஆதவதன் சந்நிதியில் அம்புலியி னுர்சோதி
பேதம்அற நிற்கின்ற பெற்றிபோல்—நாதாந்தத்து
அண்ணல் திருவருடியில் ஆன்மா அணைந்துஇன்பக்
கண்ணில் அருந்தியிடும் காண்.

பொ-ரை: கதிரவன் முன் சந்திரனிடத்தில் உள்ள ஒளி தனித்துக் காணப்படாமல் அக்கதிரவன் ஒளியில் அடங்கி நிற்கும் தன்மை போல, நாத முடிவில் உள்ள இறைவனின் திருவடியை யணைந்த உயிர் அங்கு அப்பெருமான் கொடுக்கும் பேரின்பத்தில் தோய்ந்து முனைப்பற்றுக் கிடக்கும். இதை நீஅறிவாயாக!

Koviloor Digital Library

வி-ரை: கதிரவன் ஒளியில் சந்திரனின் ஒளி அடங்கியிருக்கும் அதுபோல முத்தியின் பத்தில் அவ்வின்பத்தை நுகரும் உயிர் முனைப்பற்றுச் சிவத்தில் அடங்கியிருக்கும். இன்பக் கண்ணில் - இன்ப நுகர்ச்சியில். 47

முத்தியின் இயல்பு

சென்றிவன்தான் ஒன்றில் சிவபூரணம் சிதையும்
அன்றி அவன்தான் ஒன்றும்எனில் அந்நியமாம்
- இன்றுஇரண்டும்
அற்றநிலை ஏதென்னில் ஆதித்தன் அந்தன்விழிக்
குற்றமற நின்றதுபோல் கொள்.

பொ-ரை: முத்தி நிலையில் உயிர்தான் புரிந்த சாதனங்களால் இறைவனுடைய திருவடியை அணைந்து ஒன்றுமெனில் எங்கும் நிறைந்தது பரம்பொருள் என்ற உண்மைக் கொள்கைக்கு மாறு பாடாகும். அங்ஙனமின்றி முத்தி நிலையில் சிவபரம் பொருளே உயிரிடத்து அணைந்து ஒன்றுமெனில் இறைவன் பிறப்பு வீடு என்னும் இருநிலைகளிலும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பன் என்னும் உண்மைக் கொள்கைக்கு மாறாகும். இவ்விரு நிலைக்கும் முரணாகாது இருத்தற்கு எடுத்துக்காட்டு யாதெனில் குருடனது கண்ணில் குற்றமாகிய படலம் நீங்க அக்கண்ணொளியும் கதிரவனொளியும் இயைந்து நின்றது போலவாம் எனக் கொள்வாயாக!

வி-ரை: கண்ணுக்குரிய குணம் ஒளியுடைத்தாதல் அதன் குற்றம் படலத்தால் மறைக்கப்படுதல். அக்குற்றம் நீங்கின் அக்குணமாகிய ஒளி கதிரவனொளியொடு இயைந்து எல்லா வற்றையும் அறிந்து இன்புறும். அதைப் போன்றதே உயிரின் இயல்பும். உயிரின் குணம் அறிவுடைத்தாதல்; அதன் குற்றம் ஆணவத்தால் மறைக்கப் படுதல். அக்குற்றம் நீங்கின் உயிர் சிவத்தோடு இயைந்து இன்புற்று விளங்கும். "ஆணவமான படலங் கிழித்து அறிவில் காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி" என்னும் குமர குருபரர் திருவாக்கும் காண்க. தான் இரண்டும் அசைநிலைகள். 48

முத்தி நிலையில் முப்பொருளும் எப்படியிருக்கும் என வினவல்

வாக்கு மனம்இறந்த வான்கருணை யாளன் உருத்
தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா - நீக்காப்

Koviloor Digital Library

பதியினைப்போல் நித்தம் பசுபாசம் என்றாய்
கதியிடத்து மூன்றினையும் காட்டு.

பொ - ரை: மாற்றம் மனங்கழிய நின்றவனும் தூய்மையான வனுமான சிவபெருமானின் திருவுருவைக் கொண்டு உலகியலில் தொடக்குண்ணாது விளங்கும் ஒப்பற்ற குரு முதல்வரே! யாண்டும் நீக்கமற நிற்கும் பரம்பொருளைப் போன்றே உயிர், தளை ஆகிய இரண்டும் அழியாதன என்றீர். அங்ஙனமாயின் முத்திநிலையில் அம் முப்பொருள்களின் அழியாத் தன்மையையும் அடியேனுக்கு விளக்கி அருள்வீராக!

வி-ரை: ''பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசு, பாசம் அனாதி'' என்பர் திருமூலர். முத்தி நிலையிலும் இவை அழியாதிருக்குமோ என்பதே ஈண்டைய வினா. இதற்கு விடை தருகிறது அடுத்த பாடல். ஏகாரம் அசைநிலை. நீங்கா என்பது எதுகை நோக்கி வலித்தது. 49

முத்தியில் முப்பொருள்களின் நிலை

முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தஅனு போகத்தைத் துய்த்தல்அணு – மெத்தவே
இன்பங் கொடுத்தல்இறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள்அப் பா.

பொ-ரை: ஞான மைந்தனே! முத்திநிலையில் இறை உயிர் தளை ஆகிய முப்பொருள்களின் அழியாத் தன்மையை யாம் கூறக் கேட்பாயாக! அம்முத்தியின்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பது உயிராகும்; அதற்கு இடையீடின்றி அவ்வின்பத்தை இயைவித்து நிற்பது மலமாகும். இவ்வுண்மைகளை எம் கூற்றில் பற்றுக் கொண்டு அறிந்து கொள்வாயாக!

வி-ரை: உயிர் இறைவனை அடைதற்குத் தடையாக நிற்பதே மலம் என இதுவரை கூறியிருக்க, இங்கு அது முத்தி நிலையில் உயிர் இறையின்பத்தை நுகர்தற்கு ஏதுவாகும என்பது எங்ஙனம் பொருந்தும்? இதற்கு விடை காண்டல் இன்றியமையாததாகும்.

Koviloor Digital Library

மழை பெய்யாது நின்று உலகைக் கெடுக்கவும் செய்யும்; பெய்து நின்று உலகை வாழ்விக்கவும் செய்யும் என்பர் திருவள்ளுவர். ஈண்டு உலகைக் கெடுத்தலாவது மழை பெய்யாதிருப்பதேயன்றி வேறில்லை. அதைப் போன்றே மலமும் முத்தி நிலையில் உயிர்க்கு இன்பத்தை விளைவித்தல் என்பது உயிருக்கு அது தடைசெய்யாதிருப்பதே ஆகும். இவ்வகையில்தான் இத்தை விளைவித்தல் மலம் என்றார். எனவே உயிர் அவ்வின்பத்தை நுகர்தற்கு மல நீக்கமும் காரணமாகும் என்பர் திரு. ஆ. ஈசுவரமூர்த்திபிள்ளை. ஏகாரம் இரண்டும் அசை நிலைகள். 50

முத்திக்கு வாயில்

அப்பாஇம் முத்திக்(கு) அழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே; செப்பக்கேள் - ஒப்பில்
குருலிங்க வேடம்எனக் கூறில்இவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண்.

பொ-ரை: குருமூர்த்தியே! இம்முத்தியை அடைதற்கு நிலையான வாயிலை அருள்கூர்ந்து கூறியருள்வீராக என மாணாக்கர் வேண்ட ஆசிரியரும் கூறுகின்றார். உன் வினாவிற்குரிய விடையை யாம் கூறக் கேட்பாயாக ஒப்புயர்வற்ற குருலிங்க சங்கம வழிபாடே முத்தி அடைதற்குரிய வாயிலாம் எனச் சிவாகமங்களே கூறுமாயின் அவ்வழிபாட்டினைச் செய்து வரும் நல்லோர் மீண்டும் பிறவார் என்பதும் விளங்குமன்றோ? இவ்வுண்மையை நீ அறிவாயாக

வி-ரை: தான், ஏ என்பன அசை நிலைகள். குரு அறியாமையை நீக்குபவர். தன்னையும் தலைவனையும் முன்னை வினையின் முடிபையும் நன்கறிந்து தன்பால் வந்தடைந்தோர்க்கு உண்மையை உணர்த்தி வீடுபேறு அடைவிப்பவரே ஞானாசிரியர் அல்லது குரு எனப்படுவார். இலிங்கம் இது திருக்கோயிலின் உள்ளிருக்கும் திருமேனியாகும். "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம் நிணாகம் அணிந்தார்க்கும் நிகழ்குறியாம் சிவலிங்கம்", என்பர் சேக்கிழார். திருக்கோயில்தனில் எழுந்தருளுவிக்கப் பெற்றிருக்கும் இத்திருமேனி இறைவனுக்குரிய அடையாளம்

Koviloor Digital Library

ஆகும். இதனை இறைவனாகவே கண்டு வழிபட வேண்டும். சங்கமம் - அடியவர். 51

முத்தித் தலைவரின் பத்தி

கற்று மனம்போல் கசிந்துகசிந் தேயுருகி
உற்று ஆசான் லிங்கம் உயர்வேடம் - பற்றாக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார்.

பொ - ரை : முத்தி பேற்றுக்குரிய பெருமக்கள் குரு இலிங்கம், அடியவர் ஆகிய மூவரையும் பற்றுக்கோடாகக் கொண்டு அவரிடம் சென்று, தன் இளங்கன்றை நோக்கி நெகிழ்கின்ற பசுவின் மனம்போல எல்லையற்ற அன்பினால் உளம் நெகிழ்ந்து வழிபட்டுத் தமக்குரிய எல்லாமலங்களையும் நீக்குதற்குக் காரணமாய இப்பத்தி நெறியில் உறைத்து நிற்பார்கள் இதனை நீ அறிவாயாக !

வி-ரை: குரு, இலிங்கம், அடியவர் வேடம் ஆகிய மூவரையும் வணங்கிப் பேரின்பப் பெருவாழ்வு எய்திய சமய சந்தான குரவர்களின் வாழ்க்கையைக் கொண்டு இவ்வுண்மையை அறிதல் தகும். ஏ - அசைநிலை. 52

மாணவனின் நன்றியுணர்வு

வாழ்ந்தேன் அருட்கடலே வற்றாப் பவக்கடலில்
வீழ்ந்தே அலையாமல் மேதினியில் - சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே
உண்மைத் தவப்பயனே உற்று.

பொ - ரை: தம்பால் வந்தடைந்த அன்பர்கள் பின்னும் பிறரொருவர்பால் சென்று இரவாவண்ணம் அருள்செய்பவரும், திருவெண்ணெய்நல்லூரில் சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்டு விளங்குபவருமான மெய்கண்ட தேவே! கருணைக் கடலே ! அடியேன் முன்செய்த உண்மைத் தவப்பயனால் உம்மை அடைந்து எஞ்ஞான்றும் நீங்காத பிறவிக்கடலில் வீழ்ந்து துன்புறாமல் இந்நிலவுலகில் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று வாழ்ந்தேன்.

Koviloor Digital Library

வி-ரை: "பிறவிப் பெருங்கடல்" என்றும் எழுகடல் மணலை அளவிடின் அதிகம் எனது இடர்ப்பிறவி" என்றும் வரும் திருவாக்குகளால் வற்றுது வரும் இப்பிறவியின் உண்மை விளங்கும். சுவேதவனப் பெருமாள் என்பது திருவெணகாட்டில் உள்ள இறைவனின் பெயராகும். அப்பெருமானது அருளால் தோன்றியவர் மெய்கண்டார் ஆதலின் இளமைப் பெயர் அவருக்கு அதுவாயிற்று. உண்மைத்தவம் என்பது சரியை கிரியை யோக மாகும். இத்தவமுடையார்க்கே இறைவன் குருமூர்த்தியாய் எழுந்தருளுவன். ஆதலின் தம் குருவைத் தம் தவப்பயனுல் கண்டேன் என ஆசிரியர் அருளுகின்ருர். "நானேயோ தவம் செய்தேன்", "பன்னுள் அலமருதல் கண்ணுற்றருளிக் குருபரன் என்ருேர் திருப்பேர் கொண்டு" என வரும் திருவாக்குகள் இத் தவப்பயனை விளக்கும். குருமூர்த்தியை அடைந்து வாழ்ந்தேன் என்பதால் குருவருள் பெற்று வாழ்வதே வாழ்வு என்பதும் விளங்கும். 53

உண்மை விளக்கத் தெளிவுரை நிறைவுற்றது.

Koviloor Digital Library

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

முதற்குறிப்பு	செய்யுள் எண்
அக்கரங்கட்கெல்லாம்	29
அஞ்செழுத்தே ஆகமமும்	44
அண்ணல் முதலா	42
அந்தக் கரணம்	16
அப்பா இம் முத்திக்கு	51
அன்றியும்கேள் ஆன்மாவால்	28
ஆதவன் தன் சன்னிதியில்	47
ஆதிமலம் இரண்டும்	43
ஆடும்படி கேள் நல்	32
ஆறு சுவையும்	26
ஆருறு தத்துவம்	2
ஆருறு தத்துவமும்	22, 23
உள்ளபடி இத்தை	3
உள்ளபடி மாபூதம்	10
உற்ற குறியழியும்	40
எட்டும் இரண்டும்	31
எல்லை பலம்புதுமை	19
ஓங்காரமே நல்	34
ஓதியிடும் நாலாறும்	17
கண்ணுதல் நூல் ஓதியிடும்	14
கற்ரு மனம்போல்	52
காலம் நியதி	18
குறிகுலிசம் கோகனதம்	6
குன்ரு அருளாலே	27
சிவன் அருள் ஆவி	41
சுத்தவித்தை ஞானமிகும்	21
சென்றிவன் தான் ஒன்றில்	48

Koviloor Digital Library

சேர்க்கும் துடிசிகரம்	33
ஞானேந் திரியங்கள்	11
தத்துவங்கள் ஆருறும்	25
தத்துவங்கள் எல்லாம்	46
தோற்றம் துடியதனில்	35
நற்றவத்தோர் தாம்காண	80
நன்று உரைக்கக்கேள்	24
நன்றுக நீரிடமா	13
நாதாந்த நாடகத்தை	39
நாற்கோணம் பூமிபுனல்	4
படைப்பன் அயன் அளிப்பன்	8
பரையிடமா நின்றுமிகு	38
பாராதி ஐந்துக்கும்	7
பொய்காட்டிப் பொய்யகற்றிப்	1
பொன்பார் புனல்வெண்மை	5
மண்கடின மாய்த்தரிக்கும்	9
மாயை தனைஉதறி	36
முத்திதனின் மூன்று	50
முத்திதனை அடைந்தோர்	45
மோனந்த மாமுனிவர்	37
வண்மைதரும் ஆகமநூல்	காப்பு
வாக்காகா யம்இடமா	15
வாக்கு மனமிறந்த	49
வாழ்ந்தேன் அருட்கடலே	53
வானிடமா நின்றுசெவி	12
வித்தியா தத்துவங்கள்	20

Koviloor Digital Library

ஸ்ரீ காசிமடம் வெளியீடுகள்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

அருளிய நூல்கள்

1	கந்தர் கலிவெண்பா (மூலம் மட்டும்)	0-45
2	கந்தர் கலிவெண்பா கு. சுந்தரமூர்த்தி உரையுடன்)	1-50
3	கந்தர் கலிவெண்பா & சகலகலாவல்லிமாலை (பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்)	1-50
4	மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்	0-50
5	நீதிநெறி விளக்கம் (பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்)	1-50
6	நீதிநெறி விளக்கம் (ஆங்கிலம் இந்தி மொழிபெயர்ப்புடன்)	1-00
7	திருவாரூர் நான்மணிமாலை	0-50
8	திருவாரூர் நான்மணிமாலை & முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	1-25
9	முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	0-50
10	சிதம்பர மும்மணிக்கோவை, செய்யுட்கோவை, தில்லை சிவகாமி அம்மை இரட்டைமணிமாலை	1-25
11	மதுரைக் கலம்பகம்	0-40
12	காசிக் கலம்பகம்	0-40
13	நீதிநெறி விளக்கமும், நன்னெறியும்	0-15

இருபது பிரதிகளும் அதற்கு மேலும் வாங்குவோர்க்கு 20 சதவீதம் கழிவு உண்டு.

M. O. அனுப்ப வேண்டிய முகவரி :

மேலாளர், ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்-612504

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12805